வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 05 | 21.02.2024 புதன்கிழமை | இதழ் : 52 | பக்கங்கள் : 12




# இலங்கை அமெரிக்காவின் பிராந்தியமல்ல!

## அரசாங்க தூதருக்கு அரசு இப்படி பதில்!

கொழும்பு, பெப்ரவரி 21

**இலங்கை அமெரிக்காவின் பிராந்தியமல்ல. இறையாண்மையுடைய சுயாதீனமான எமது நாட்டின் பாராளுமன்றத்துக்கு மாத்திரமே சட்ட திட்டங்கள் தொடர்பான உரிமையும் காணப்படுகிறது - இவ்வாறு தெரிவித்துள்ளார் அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன.**

நேற்று செவ்வாய்க்கிழமை அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இலங்கை வந்த அமெரிக்காவின் பொது உறவுகளுக்கான துணை இராஜாங்க செயலாளர் எலிசபெத் அலன், இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஆகியோர் நிகழ்நிலை காப்பு சட்டம் தொடர்பில் நேற்று முன்தினம் கரிசனை வெளியிட்டிருந்தனர். இந்த நிலையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

11

புதிய பயங்கரவாத சட்டம்:

# சில சரத்துகளை நிறைவேற்ற 3இல் 2 பெரும்பான்மை அவசியம்!

## உயர்நீதிமன்றம் தீர்ப்பில் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.21

புதிய பயங்கரவாத சட்டத்தின் சில சரத்துகளை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடனேயே நிறைவேற்ற முடியும் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவிடம் வழங்கப்பட்டது. நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் பிரதி சபாநாயகர் தீர்ப்பைக் கையளித்தார்.

திருத்தங்கள் இன்றி சட்ட மூலம் நிறைவேற்றப்படுவதெனில், அதில் உள்ள சில சரத்துகள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும் என உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது. (ஐ)

# விவசாயத்துறையில் விரைவான மாற்றம்!

## ஜனாதிபதி ரணில்

கொழும்பு, பெப். 21

விவசாயத் துறையில் விரைவான மாற்றத்துடன் விவசாயப் பயிர்களின் பிரதான ஏற்றுமதியாளராக இலங்கையை உயர்த்துவதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அத்துடன், நாடு கடந்த பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதில் விவசாயம் பெரும்

11

# தமிழ் மக்களை சிங்கள தரப்புக்கு வாக்களிக்க வைப்பதற்கு முயற்சி

## ஐ. த. தே. கூட்டணியை சாடுகிறார் கஜேந்திரகுமார்

யாழ்ப்பாணம், பெப். 21

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி ஒரு பொது வேட்பாளரை நிறத்துவது என்றும் தமிழ் மக்கள் பொது வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும் என்றும் விரும்பினால் இரண்டாவது வாக்கைத் தமக்கு பிடித்த வேட்பாளருக்கு வழங்கலாம் என்றும் கூறுகின்றது. இது நேரடியாக சிங்களத் தரப்புக்கு வாக்களிக்குமாறு கூறுவதற்கு சமன். - இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

11

# கோவிட் தடுப்பூசிகளால் பக்கவிளைவு நோய்கள்!

## மருத்துவ ஆய்வில் தகவல்

நியூயோர்க், பெப். 21

பைசர், அஸ்ட்ரா ஷெனகா, மொடேர்னா தடுப்பூசிகளை போட்டுக் கொண்டவர்களுக்கு இதயம், மூளை மற்றும் இரத்த நாளங்கள், நரம்புகளில் பக்கவிளைவுகள் ஏற்பட்டுள்ளன என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

கனடா, பிரான்ஸ், டென்மார்க், பின்லாந்து, நியூசிலாந்து, ஆர்ஜென்ரீனா, ஸ்கொட்லாந்து என 8 நாடுகளில் சுமார் 10 கோடி மக்களை உள்ளடக்கி இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டதாக ஆய்வை நடத்திய உலக சுகாதார அமைப்பின் ஆராய்ச்சி பிரிவின் 'குளோபல் வக்சின் டேற்றா நெற்வேர்க்' இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இந்த ஆய்வு நிறுவனம் பைசர், மொடர்னா, அஸ்ட்ராசெனகா கோவிட் தடுப்பூசிகளை பெற்ற பின்னர் அந்த நோய்களால்

11

# கடந்த ஆணைக்குழுக்களின் பரிந்துரையை அமுல் செய்க

## உண்மை மற்றும் நீதிக்கான திட்டம்

கொழும்பு, பெப். 21

இலங்கை அரசாங்கம் புதிய உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவை அமைப்பதற்கு முன்னர் முன் னைய ஆணைக்குழுக்கள் தெரிவித்துள்ள விடயங்களை ஏற்றுக்கொண்டு அவற்றின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவேண்டும் என சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் தெரிவித்துள்ளது.

பாரதூரமான மனித உரிமைகள் மீறல் தொடர்பாக விசாரணை செய்வதற்கு அமைக்கப்பட்ட அரசாங்க ஆணைக்குழுக்களின் எண்ணிக்கை பாதிக்கப்பட்ட இலங்கையர்களால் கணக்குவைக்க முடியாத அளவுக்குத் தாண்டியுள்ளது.

இருந்தும் பிறிதோர் ஆணைக்குழுவை

11

# கடற்றொழில் சட்டத்தால் பாதிப்பில்லை

## அமைச்சர் டக்ளஸ்

கொழும்பு,பெப். 21

உத்தேச கடற்றொழில் சட்டத்தின் ஊடாக மீனவ மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும். அவர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

"திருத்தப்பட்ட புதிய கடற்றொழில் சட்டமூலத்தை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவையான ஏற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மீன்பிடித் தொழில் வளர்ச்சியின் மூலம் மீன்பிடிபாடு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. உத்தேச கடற்றொழில் சட்டமூலம் தொடர்பில்

11

# இந்திய மீனவர் அத்துமீறலை கண்டித்து நேற்று போராட்டம்!

யாழ்ப்பாணம், பெப். 21

தமிழ்நாடு மீனவர்களின் அத்துமீறலை உடனடியாக தடுத்து நிறுத்த இலங்கை - இந்திய அரசாங்கங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல், எமது போராட்டம் தொடர் போராட்டமாகி கடலிலும் தரையிலும் போராட்டமாக மாறும் - இவ்வாறு எச்சரித்துள்ளார் யாழ். மாவட்ட மீனவர்கள்.

இந்திய மீனவர்களின் அத்துமீறலை கண்டித்து யாழ். இந்திய துணை துதரகம் அருகே நேற்று செவ்வாய்க்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர். தூதரகத்துக்கு செல்லவிடாமல் அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்ட நிலையில் அதற்கு

11

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கிளிநொச்சியில் பேரணி!

கிளிநொச்சி, பெப். 21

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் நீதி கோரிய போராட்டம் நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது. கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக முற்பகல் 10.30 மணியளவில் ஆரம்பமான இந்தப் போராட்டத்தில் பௌத்த பிக்கு ஒருவரும் பங்கேற்றிருந்தார்.

காணாமல்

11



# புலிகளின் தங்கத்தைத் தேடி நடந்த அகழ்வு நிறுத்தப்பட்டது

கிளிநொச்சி, பெப். 20

விடுதலைப் புலிகள் புதைத்து வைத்த தங்கத்தைத் தேடி இரு நாட்களாக தோண்டியும் எதுவும் எடுக்கப்படாத நிலையில் அகழ்வு பணிகள் நிறைவடைந்தன.

முல்லைத்தீவு, கிளிநொச்சி வீதியில் கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குமாரசாமிபுரம் கிராம அலுவலகர் பிரிவில் றெட்பானா சந்திக்கு அருகில் உள்ள காணியில் அரைக்கும் ஆலை அமைந்துள்ள கட்டடம் மற்றும் அந்த காணிக்குள்ளும் இந்த அகழ்வு பணிகள் நேற்று முன்தினமும் நேற்றும் முன்னெடுக்கப்பட்டன.

காணியில் ஏற்கனவே, சிலர் சட்டவிரோதமான முறையில் தோண்ட முற்பட்டு தர்மபுரம் பொலிசாரால் கைது செய்யப்பட்ட நிலையில் குறித்த காணியில் பரல் கணக்கில் விடுதலைப் புலிகள் தங்கத்தினை புதைத்து வைத்துள்ளதாக நம்பத்தகுந்த நபர் ஒருவர் தெரிவித்த கருத்துக்கு அமைய தர்மபுரம் பொலிஸாரால் நீதிமன்றில் அனுமதி பெறப்பட்டு தோண்டும் நடவடிக்கைகள் நேற்று முன்தினமும் நேற்றும் முன்னெடுக்கப்பட்டிருந்தன.



அரைக்கும் ஆலையின் கட்டடத்திற்குள் ஒருபகுதி சுமார் 6 அடிக்கு மேல் தோண்டப்பட்ட போதும் எதுவும் கிடைக்கவில்லை இதனை விட காணியின் பின்பக்கத்தில் இரு இடங்களில் கனரக இயந்திரம் கொண்டு நிலத்தில் சுமார் 10 அடிவரை தோண்டப்பட்ட போதும் எதுவும் காணாத நிலையில் குறித்த பகுதிகளை மூடுவதற்கு பணிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தோண்டும் நடவடிக்கைக்காக காணியைசுற்றி பெருமளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்ட நிலையில் இந்த அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டு நிறைவுக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# யாழில் 33 பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகள்

யாழ்ப்பாணம், பெப். 21

யாழ்ப்பாணத்தில் 33 பாதுகாப்பு அற்ற புகையிரத கடவைகள் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணத்துக்கு கடந்த மாதம் ஜனாதிபதி வருகை தந்திருந்தார். அப்போது, மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கலந்து கொண்ட போது, 33 பாதுகாப்பு அற்ற கடவைகளையும் பாதுகாப்பான கடவையாக மாற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப் பட்டது.

இந்த வருடத்துக்குள் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் புகையிரத திணைக்களத்திடம் மதிப்பீட்டு அறிக்கைகளும் ஜனாதிபதியால் கோரப்பட்டன.

ஒரு மாத காலம் கடந்தும் இதுவரையில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

கடந்த வாரம் இணுவில் பகுதியில் வான் ஒன்று ரயிலுடன் மோதி விபத்துக்கு உள்ளானதில் வானில் பயணித்த 6 மாத குழந்தையும், தந்தையும் உயிரிழந்த நிலையில் தாய் படுகாயமடைந்த நிலையில் யாழ், போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த விபத்தையடுத்து இரண்டு நாட்கள் ஊரவர்கள் ரயிலை தடுத்து நிறுத்து போராட்டங்களில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் பொலிஸ், படை தரப்பினருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், பெப். 21

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும், பொலிஸ் மற்றும் படைத் தரப்பினருக்கும் இடையிலான கலந்துரையாடல் யாழ். தலைமைப் பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் எல்.டீ.பி.தெஹிதெனிய, இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் நிமால் புஞ்சிஹேவா, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ், பொலிஸ், இராணுவ மற்றும் கடற்படை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மனித உரிமைச் சட்டங்கள் தொடர்பாகவும் பொலிஸ் மற்றும் படைத் தரப்பினர் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பாகவும், சிறு குற்றம், பெரும் குற்றங்கள் இடம்பெறும் போது விசாரணைகள் மேற்கொள்ளும் விதம் தொடர்பாகவும் இதன்போது கலந்தாலோசிக்கப்பட்டது. (ஐ)

## கலை இலக்கிய பேரவையின் தேசிய மாநாடு

யாழ்ப்பாணம், பெப். 21

சமூக மாற்றத்திற்கான கலை இலக்கிய பாதையில் 50 ஆண்டுகள் கடந்து பயணித்து வரும் தேசிய கலை இலக்கிய பேரவையின் நான்காவது தேசிய மாநாடு 'புதிய பண்பாடு நோக்கி மக்கள் கலை இலக்கியம்' என்ற தொனிப்பொருளில் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை, இல. 538, நெழுங்குளம் சந்தி, ஏ9 வீதி, அரியாலை என்ற முகவரியில் அமைந்துள்ள சர்வோதயம் அமைப்பின் யாழ். பிராந்திய நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

# அரசியலுக்கு வருகின்றார் கோட்டாபயவின் செயலர்!

கொழும்பு, பெப். 21

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பிரத்தியேக செயலாளராக கடமையாற்றிய சுகீஸ்வர பண்டார, தனது இராஜினாமா கடிதத்தை முன்னாள் ஜனாதிபதிக்கு நேற்று செவ்வாய்க்கிழமை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில், தன்னை முன்னாள் ஜனாதிபதியின் பிரத்தியேகச் செயலாளராக வைத்திருந்தமைக்கு முதலில் நன்றி தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ளதுடன், அரசியல் ஈடுபடுவதற்காகவே தனது பதவியை இராஜினாமா செய்தார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா உள்ளிட்டோரால் உருவாக்கப்பட்டுள்ள புதிய கூட்டணியில் தீவிர அரசியலில் ஈடுபடவுள்ளார். (ஐ)

# இப்படியும் நடக்கிறது

ஜே. வி. பி. என்ற மக்கள் விடுதலை முன்னணியின் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் இந்தியாவுக்கு பயணம் செய்திருந்தமை பற்றி முன்னரும் இந்தப் பத்தியில் எழுதியிருந்தோம்.

இந்தியா, இலங்கையுடன் செய்துகொள்ள விரும்பும் 'எட்கா' உடன்படிக்கை தொடர்பாக ரணிலின் இந்த ஆட்சிக் காலத்திற்குள்ளாகவே அதனைச் செய்து கொள்ள முயற்சி செய்வது குறித்தும் அதற்கு ஜே. வி. பியிடமிருந்து எதிர்ப்பு வருவதைத் தடுப்பதும் அவர்களை இந்தியாவுக்கு அழைத்ததற்கான காரணமாக இருக்கலாம் என்றும் எழுதியிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். அவ்வாறு எழுதிய பின்னர், எட்கா குறித்த விடயங்கள் தீவிரமடைந்திருப்பதையும் அதாவது, அதனை செய்து கொள்ள இந்தியா அதிக ஆர்வம் காட்டிவருவது பற்றிய செய்திகளும் வெளிவந்த வண்ணமுள்ளன.

இந்தவேளையில், பௌத்தர்களின் புனித தலங்களில் ஒன்றான மிகிந்தலை ரஜமஹா விகாரையின் விகாராதிபதி வலவாஹெங்குனுவெவே தம்மரத்ன தேரர் ஒரு தகவலை பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார். அண்மையில், இந்தியாவுக்கு சென்ற ஜே. வி. பியினருக்கு இந்தியா முந்நூறு கோடி ரூபாயை தேர்தல் செலவுக்காக வழங்கியது என்பதுவே அது.

ஜே. வி. பி. தலைவர்கள் தமது இந்திய பயணத்தின் போது, குஜராத் மாநிலத்துக்கும் சென்றிருந்தனர். அது பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் சொந்த மாநிலம் என்பதற்கு அப்பால் அங்கு அவர்கள் விஜயம் செய்ததற்கு மற்றுமொரு விசேட காரணமும் உண்டு.

'அமுல்' என்பது இந்திய மாநிலமான குஜராத்திலுள்ள ஆனந்த் எனும் ஊரைத் தலைமை இடமாகக் கொண்டு இயங்கும் ஆனந்த் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் ஆகும்.

இந்த நிறுவனம் 1946ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தற்பொழுது சுமார் மூன்று மில்லியன் பால் உற்பத்தியாளர்களை உள்ளடக்கிய ஜி. சி. எம். எம். எவ். எனப்படும் குஜராத் கூட்டுறவு பால் விற்பனை கூட்டமைப்பின்கீழ் இயங்கி வருகிறது. அமுல் என்பதற்கு சமஸ்கிருத மொழியில் 'விலை மதிப்பற்றது' என்பது பொருளாகும்.

வணிக நடவடிக்கைகளாகிய பால் கொள்முதல், பதப்படுத்துதல், குளிரூட்டுதல் மற்றும் விற்பனை ஆகிய பணிகளைச் செய்கிறது. அமுலின் வெற்றியைத் தொடர்ந்து இதே மாதிரியைக் கொண்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் இந்தியாவின் மற்ற மாநிலங்களில் ஆரம்பிக்கப்பட்டது. தமிழ் நாட்டில் இயங்கி வரும் 'ஆவின்' எனப்படும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் அமுலை முன்மாதிரியாகக் கொண்டது ஆகும்.

இந்த அமுல் நிறுவனத்தின் தலைமையகத்தையும் நமது ஜே. வி. பி. தலைவர்கள் தமது பயணத்தின்போது சென்று பார்த்திருந்தனர் என்பது கூடுதல் தகவல்.

அந்த அமுல் நிறுவனம் தான் இலங்கை அரசுக்கு சொந்தமான கால்நடை பண்ணைகளை நீண்டகால குத்தகைக்கு பெறவிருக்கின்றது. சுமார் நாற்பத்தி எட்டு ஆயிரம் ஏக்கர் விஸ்தீரணமுள்ள பண்ணைகள் இனி இந்த அமுல் நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் வரவிருக்கின்றன.

தற்போது, அந்த நிறுவனத்தின் அதிகாரிகள் குழு ஒன்று, இலங்கையில் தங்கியிருந்து நமது அரச பண்ணைகளுக்கு சென்று மதிப்பீட்டு பணியை நிறைவு செய்துள்ளன. இனி என்ன? அந்த பண்ணைகள் கைமாறுகின்ற போதும் நமது சிவப்பு தோழர்கள் அமைதியாக அதனைக் கடந்து செல்வார்கள்.

இதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கின்றது? நமது குறிக்கோளை அடைய வேண்டும் என்றால், இது போன்ற விட்டுக்கொடுப்புக்களைச் செய்துதான் ஆக வேண்டும்.

அதுவல்ல எமக்கு உறுத்துகின்ற முக்கிய விடயம்.

அரசாங்கம் தனது பண்ணைகளை நிர்வகிக்கத் தெரியாமல், (அமுல் அதனை நிர்வகிக்கத்தயாராக இருக்கின்றது என்றால் ஏன் எம்மால் முடியாது?) இந்திய நிறுவனத்துக்கு வழங்குகின்றது சரி. ஆனால், மிக வெற்றிகரமாக பால் உற்பத்தியில் ஈடுபட்டு - நமது பால் தேவைக்கு முக்கிய பங்காற்றிவரும் மட்டக்களப்பு பால் உற்பத்தியாளர்களின் மேய்ச்சல் தரைகளை அடாத்தாக ஆக்கிரமித்து - அந்த பால் உற்பத்திக்கு சமாதி கட்டிக்கொண்டிருக்கின்ற மயிலத்தனை நெருக்கடி பற்றி -அங்கே கால்நடைகள் விஷம் வைத்தும் - வெடி வைத்தும் கொல்லப்படுவது பற்றி நமது சிவப்பு தோழர்கள் இதுவரை வாயே திறக்கவில்லையே எதற்காக? அதுவும் அதிகாரத்துக்கு வரவேண்டும் என்ற ஆசையினால் தானா?

**- ஊர்க்குருவி.**

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
21.02.2024 புதன்கிழமை
சோபகிருது வருடம், மாசி 09

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# மீனவர் பிரச்னை

வடபுல மீனவர் அமைப்புகள் இந்தியத் துணைத் துதரகத்தை முற்றுகையிடும் வகையில் தங்களது எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்திருக்கின்றனர். மீனவர் பிரச்னை ஒரு புதிய விடயமல்ல - இது பல வருடகால பிரச்னை. ஆரம்ப காலத்தில் இவ்வாறானதொரு பிரச்னை இருந்ததில்லை. யுத்த காலத்திலும் இவ்வாறான விடயங்கள் பேசப்பட்டதில்லை.

தற்போது இந்த விடயம் அதிகம் பேசப்படுகின்றது. உண்மையில், இந்த விடயத்தில் கடற்றொழில் அமைச்சே நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். இது தொடர்பில் ஜனாதிபதியுடன் பேசி உயர்மட்டத்தில் இந்த பிரச்னையை கையாள்வது தொடர்பில் பேசியிருக்க வேண்டும். இந்திய துணைத் தூதரகம் பிரச்னையை தீர்க்க வேண்டுமாயின், பினனர் எதற்காக ஒரு கடற்றொழில் அமைச்சு இருக்க வேண்டும் - எனவே வடபுல மீனவர்கள் தங்கள் முற்றுகையை கடற்றொழில் அமைச்சுக்கு முன்னால்தான் முன்னெடுத்திருக்க வேண்டும்.

இது இரண்டு நாடுகள் தொடர்புபட்ட விடயம். அண்மையில், இந்த விடயம் தொடர்பில் தமிழ்நாட்டு மீனவர் அமைப்புகளின் பிரதிநிதிகள் இந்திய வெளியுறவு அமைச்சரை சந்தித்து கலந்துரையாடியிருந்தனர். தாங்கள் அத்துமீறவில்லை, இலங்கை கடற்படை பொய்யான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் தங்களின் மீனவர்களை கைது செய்வதாக அவர்கள் முறையிட்டிருந்தனர். இப்போது என்ன செய்வது?

உண்மையில், இது அரசியல் இலாபம் தேடும் பிரச்னையல்ல. இதேவேளை வீடு எரிகின்றபோது, அகப்பட்டதைக் கொள்ளிக்கட்டையாக்கிக் கொள்வோம் என்று எண்ணும் சக்திகளுக்கான வாய்ப்பாகவும் இந்தப் பிரச்னை மாறிவிடக்கூடாது. இதனை மிகவும் நிதானமாகவும் தூரநோக்குடனும் கையாள வேண்டும். மீனவர்களின் ஆதங்கத்தில் நியாயமுண்டு. ஆனால், அவர்களைப் போன்று அரசியல்வாதிகளும் உணர்ச்சிவசப்பட்டு விடயங்களை கையாளக்கூடாது.

இதற்கான நிரந்தரத் தீர்வை காணும் முயற்சிகளில் அனைத்துத் தரப்புகளும் ஒற்றுமையுடன் செயலாற்ற வேண்டும். கடந்த காலத்தில் தமிழ்த் தேசிய கட்சியினர் கடலில் இறங்கியும் போராட்டங்களில் ஈடுபட்டிருந்தனர். ஆனாலும் எதுவும் நடக்கவில்லை. ஏனெனில், இந்திய - இலங்கை மீனவர் விவகாரம் இவ்வாறான போராட்டங்களால் தீர்ந்துவிடக் கூடியதல்ல - அவ்வாறாயின், இந்தப் பிரச்னை எப்போதோ தீர்ந்திருக்கும்.

இது வாழ்வாதார பிரச்னையாக இருக்கின்றது என்றால் இது தொடர்பில் கடற்றொழில் அமைச்சு ஒரு முறையான ஆய்வை மேற்கொள்ள வேண்டும். கடந்த மூன்று வருடங்களை கணக்கில் கொண்டு அந்த ஆய்வை மேற்கொள்ளலாம். இந்திய மீனவர்கள் வடபுல கடல் எல்லைக்குள் அத்துமீறியிருக்கின்றார்களா? எவ்வாறான சந்தர்ப்பங்களில் அத்துமீறியிருக்கின்றனர் அவை திட்டமிடப்பட்ட அத்துமீறல்களா அல்லது எல்லையை சரியாக விளங்கிக்கொள்ள முடியாமல் இடம்பெற்ற செயலா? ஏனெனில், இலங்கை கடற்படை கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போதுதான் இவ்வாறான விடயங்கள் இடம்பெறுவதாக கூறப்படுகின்றது. கைதுகள் இடம்பெறுகின்றன. இந்திய மீனவர்கள் அத்துமீறுவதை அவதானித்தால் கடற்படையினர் அவர்களை அப்பகுதியிலிருந்து, அகற்ற முடியும். ஆனால், அவ்வாறு நிகழ்வதில்லை மாறாக முரண்பாடுகளே தீவிரமடைகின்றன.

முதலில் கடற்றொழில் அமைச்சு இவ்வாறானதோர் ஆய்வை மேற்கொள்ள வேண்டும். அதன் பின்னர் விடயங்களை கொள்வதற்கான பொறிமுறை ஒன்றை உருவாக்க முயற்சிக்க வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பத்தில்தான் இரு நாடுகளும் இணைந்து விடயங்களை கையாள முடியும் - அவ்வாறில்லாது, மற்றவர்கள் மீது குற்றஞ்சாட்டுவதன் ஊடாக இந்தப் பிரச்னையை ஒருபோதுமே கையாள முடியாது.

# ஒய்வூதியர்களுக்கான கொடுப்பனவு முரண்பாடுகளுக்கு தீர்வு எப்போது?

## எதிர்க்கட்சி தலைவர் சபையில் கேள்வி

கொழும்பு, பெப். 21

சம்பள முரண்பாடுகளோடு தற்போதும் ஒய்வூதியம் பெறும் 2016 - 2020 ஆம் ஆண்டுக்குள் ஒரு இலட்சத்து 12 ஆயிரம் ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவு முரண்பாடுகள் எப்போது தீர்க்கப்படும்? என எதிர்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நிலையியற் கட்டளை 27 (2) இன் கீழ் இவ்வாறு கேள்வி எழுப்பிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

சம்பள முரண்பாடுகளோடு தற்போதும் ஒய்வூதியம் பெற்று வரும் 2016 - 2020 ஆம் ஆண்டுக்கிடைப்பட்ட ஓய்வூதியம் பெறும் ஒரு இலட்சத்து 12 ஆயிரம் ஓய்வூதியர்களின் கொடுப்பனவு முரண்பாடுகள் எப்போது தீர்க்கப்படும்? ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படும் 2 ஆயிரத்து 500 வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு தற்போது பணிபுரியும் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படவில்லை.

கடந்த 10 ஆண்டுகளில் அரச துறையில் ஓய்வூதியத்தின் சம்பள செலவு கணிசமாக அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பு தொடர்பில் அடுத்த 10 வருடங்களுக்கு முன்வைக்கப்பட்ட கணிப்புகள் என்ன?

தொடர்ச்சியான ஓய்வூதிய அதிகரிப்பை அரசாங்கத்தால் தாங்க முடியாது என பல கருத்துக்கள் நிலவி வரும் நிலையில், நிலையான ஓய்வூதிய நலன்களை வழங்குவதற்கான அரசாங்கம் மேற்கொண்டுள்ள பகுப்பாய்வு மற்றும் வேலைத்திட்டம் என்ன?

விவசாயிகளின் ஓய்வூதியத் திட்டம் இன்று முற்றிலுமாக வீழ்ச்சியடைந்துள்ளது, எனவே இதனை செயல்படுத்த வேண்டும் மீனவர் ஓய்வூதியம் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும், அது நிலையாக பேணப்படவேண்டும்.

தொடர்பில்லாத ஓய்வூதிய நிதிகள் அல்லது சமூகப் பாதுகாப்புப் பலன்களை வழங்கும் முறையை விட சகல நபரையும் உள்ளடக்கும் வகையில் சமூக பாதுகாப்பு வேலைத்திட்டத்தை தயாரிக்க வேண்டும் - என்றார்.

# சைவ வித்தியா விருத்தி சங்கத்தின் நூற்றாண்டு விழா!

யாழ்ப்பாணம், பெப். 21

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் நூற்றாண்டு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளன.

நல்லூர் ஸ்ரீதுர்க்கா தேவி மணிமண்டபத்தில் காலை 9 மணி முதல் நண்பகல் 12.45 மணி வரை நடைபெறும் முதல் அமர்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ. சிவபாலசுந்தரன், சிறப்பு விருந்தினராக ஸ்ரீதுர்க்காதேவி ஆலய தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆகி யோர் பங்கேற்பர்.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி தி. செல்வமனோகரன் தலைமையில் மாறிவரும் சமூகத்தில் சமயத்தின் வகிபாகம் என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. தொடர்ந்து, இசை நிகழ்வுகள் நடைபெறும்.

பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகும் இரண்டாம் அமர்வில் முதன்மை விருந்தினராக நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் ஜெ. பொ. சுகந்தராஜ், சிறப்பு விருந்தினராக திருநெல்வேலி ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் வேலாயுதம் வசீகரன் ஆகியோர் பங்கேற்பர்.

இந்த அமர்வில் கலை நிகழ்வுகள், கையேடு வெளியீடு என்பன நடைபெறவுள்ளன. (ஐ)

# குருபூசையும் சொற்பொழிவும்

யாழ்ப்பாணம், பெப். 15

சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறிப் பிரகாசர் கதிகாமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் வாராந்த பெரியபுராண சிறப்பு சொற்பொழிவுத் தொடர் 46 (கூற்றுவ நாயனார்) ஆனைக்கோட்டை - சாவற்கட்டு - அந்திக்குழி அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் காளி அம்பாள் ஆலய பிரதான மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

சேக்கிழார் பெருமான் குருபூசையை தொடர்ந்து சொற்பொழிவை இளளம் சைவப் புலவர் ச. நவநீதன் ‘தில்லைப் பெருமான் கனவிலே தன் திருவடியையே முடியாகச் சூட்டியருளிய நாயனார்’ என்னும் விடயப் பொருளில் ஆற்றுவார். (ஐ)


# சுக்கிர வார சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பெப். 21

நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடைபெறும் சுக்கிர வார சிறப்புச்சொற்பொழிவு ஆலயத்தின் சண்முக விலாச மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு சிவநெறிப் பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாத குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து சொற்பொழிவை சைவப் புலவர் பொன். சந்திரவேல் ‘நாம மகிமை’ என்னும் விடயப்பொருளில் ஆற்றுவார்.

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**பெப்ரவரி - 21 புதன்கிழமை**
**சோபகிருது வருடம் - மாசி 09**
**நல்ல நேரம் : 12.31 - 02.01**
**ராகு காலம் : 11.02 - 12.32**
**திதி : துவாதசி**




**மேடம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். விருந்தினர் வருகையால் வீடு களைகட்டும்.

**இடபம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். தோற்றப் பொலிவு கூடும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். நீண்ட நாள் பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்கும்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். குடும்பத்தாரை குறை கூறி கொண்டிருக்க வேண்டாம். லாபம் குறையும்.

**கடகம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பிள்ளைகளால் டென்ஷன் அதிகரிக்கும். சகோதரி உதவுவார். விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாளுங்கள்.

**சிம்மம்**
தன்னம்பிக்கையுடன் பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். புதிய முயற்சிகள் பலிதமாகும்.

**கன்னி**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். உங்களால் பயனடைந்தவர்கள் சிலர் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள்.

**துலாம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கி உற்சாகமடைவீர்கள். குடும்பத்தில் அமைதி திரும்பும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். யாருக்கும் பணம் வாங்கித் தருவதில் ஈடுபடவேண்டாம். பொறுமை தேவைப்படும் நாள்.

**தனுசு**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். தாயாரின் உடல் நிலை சீராகும். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும்.

**மகரம்**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். பழைய சிக்கல்கள் தீரும்.

**கும்பம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். ஆடம்பர செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். கனவு நனவாகும் நாள்.

**மீனம்**
எதிர்பார்த்த சில தள்ளிப்போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். தாயாருக்கு வீண் டென்ஷன் வந்துப்போகும். புதுவேலை அமையும்.

# 27ஆம் திகதி தமிழகம் வருகின்றார் பிரதமர்!

சென்னை, பெப். 21

எதிவரும் 27ஆம் திகதி பிரதமர் மோடி தமிழ்நாட்டுக்கு வருகை தருவார். இதன்போது, அவர் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்வார் என்று அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

டில்லியில் இருந்து சென்னை திரும்பிய பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை நேற்று செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு,

பா. ஜ. கவின் தேசிய செயல் குழு கூட்டத்தில் தமிழகத்தில் இருந்து 450இற்கும் மேற்பட்ட தலைவர்கள், நிர்வாகிகள் பங்கேற்றனர். வளர்ச்சி அடைந்த பாரதம் 2047 இலக்கு என்ற தீர்மானமும், எதிர்கட்சிகளுடைய சந்தப்பவாத அரசியலை இந்திய மக்கள் நிராகரித்து கொண்டிருக்கிறார்கள், 3ஆவது முறையாக பா. ஜ. க. ஆட்சி கட்டிலில் அமரவைக்க மக்கள் நினைக்கிறார்கள் என்ற மற்றொரு தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கூட்டணி குறித்து நேரம் வரும் போது தெரிவிக்கிறோம். என் மண் என் மக்கள் இறுதி நாள் யாத்திரை வரும் 27ஆம் திகதி பல்லடத்தில் நடக்கிறது. அன்று பிரதமர் மோடியும் கலந்து கொள்கிறார். 27, 28ஆம் திகதிகளில் 2 நாட்கள் தமிழகத்தில் பல்வேறு நிகழ்வுகளில் பிரதமர் மோடி கலந்து கொள்கிறார். தமிழக காங்கிரஸ் கட்சி தலைவராக பொறுப்பேற்றுள்ள செல்வபெருந்தகைக்கு வாழ்த்துக்கள் - என்றார். (ஐ)

# எங்கும் தமிழ் எதிலும் தமிழ் நிலையை உருவாக்க வேண்டும்!

## தமிழக அரசை கோருகிறது பா. ம. க.

சென்னை, பெப். 21

தமிழ்நாட்டில் அன்னைத் தமிழ் தொடர்பான மேற்கண்ட கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றி எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற நிலையை உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் ச. ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

தாய்மொழி தினம் இன்றாகும். இதையொட்டி அவர் நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையில், "தாய்க்கு இணையான மரியாதை தாய்மொழிக்கும் வழங்கப்பட வேண்டும் அன்னை மொழிக்கு ஆபத்து ஏற்பட்டால் அதற்காக எந்த தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் உலகத் தாய்மொழி நாள் கொண்டாடப்படும் நிலையில், இதனைக் கொண்டாடும் அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் அன்னைத் தமிழைக் காக்க தீக்குளித்த தீரர்கள் வாழ்ந்த தமிழ்நாட்டில் தமிழ் மொழியின் இன்றைய நிலை கவலையளிக்கிறது. உலகத் தாய்மொழி நாள் அறிவிக்கப்பட்டதன் வெள்ளிவிழா ஆண்டு நாளை (இன்று) கொண்டாடப்படுகிறது. உலகத் தாய்மொழி நாளுக்கு நீண்ட, உணர்ச்சி மிகுந்த வரலாறு உண்டு.

தமிழ்நாட்டில் எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் கடந்த முப்பதாண்டுகளுக்கும் மேலாக பாட்டாளி மக்கள் கட்சியின் முழக்கமாக உள்ளது. உலகத் தாய்மொழி நாள் அறிவிக்கப்பட்ட நாள் முதல் இந்த முழக்கம் தீவிரமடைந்தது. உலகத் தாய்மொழி நாள் அறிவிக்கப்பட்ட அதே ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் தான் தமிழ்நாட்டில் தமிழைக் கட்டாய பயிற்றுமொழியாக்க வலியுறுத்தி சென்னையில் 102 தமிழறிஞர்கள் சாகும்வரை உண்ணாநிலை மேற்கொண்டனர். ஆனால், ஆட்சியாளர்களுக்கு அக்கறை இல்லாததால் அன்னைத் தமிழை இன்று வரை அரியணை ஏற்ற முடியவில்லை.

ஹிந்தி ஆதிக்கத்திலிருந்து அன்னைத் தமிழைக் காக்க வேண்டும் என்பதற்காக 500இற்கும் மேற்பட்டோர் உயிர்த் தியாகம் செய்த தமிழ்நாட்டில் தமிழ் மொழியின் இன்றைய நிலை வருத்தமும், வேதனையும் அளிப்பதாக உள்ளது. இந்த நிலையை மாற்ற வேண்டிய கடமையும், பொறுப்பும் தமிழக அரசுக்கு தான் இருக்கிறது. இதை உணர்ந்து எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற நிலையை உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" - என்றுள்ளது. (ஐ)

# தமிழக அரசின் வரவு - செலவு திட்டம் தலைவர்களின் வரவேற்பும் - எதிர்ப்பும்

சென்னை, பெப். 21

தமிழக அரசு தாக்கல் செய்துள்ள வரவு - செலவு திட்டத்துக்கு கட்சிகளின் தலைவர்கள் ஆதரவும் எதிர்ப்பும் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கைகளில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கு. செல்வப்பெருந்தகை -

மத்திய அரசு இதுவரை பேரிடர் நிதியிலிருந்து நிதி அளிக்காமல் துரோகம் செய்கிறது. நான் முதல்வன் திட்டத்தின்கீழ் அரசு உதவி பெறும் பள்ளிகளைச் சேர்த்தது, பல துறைகளுக்கு நிதி கூடுதலாக ஒதுக்கி இருப்பது வரவேற்கத்தக்கது.

இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் -

இடை பாலினத்தவர்களுக்கு கல்வி, விடுதி இலவசமாக வழங்குவதும், கல்லூரி கல்வி செலவை அரசே ஏற்பதும் அவர்களின் சமூக ஒப்புதலுக்கு வழிவகுக்கும். உயர் கல்வி பெறும் மாணவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் அவர்களது வங்கிக் கணக்கில் செலுத்தும் தமிழ்ப்புதல்வன் திட்டமும் வரவேற்கத்தக்கது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் - தொழில் புத்தாக்க மையங்கள், தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள், செயற்கை நுண்ணறிவு கல்வி, திறன்மிகு வகுப்பறை, அனைத்து தொழில் படிப்பு மாணவர்கள் கல்வி கட்டண உதவி ஆகியவை வளர்ந்து வரும் அறிவுசார் இளைய சமூகத்தின் வாழ்க்கை மேம்பாட்டுக்கும், தொழில் வளர்ச்சிக்கும் மிகுந்த ஊக்கம் அளிக்கக் கூடியது.

ம. தி. மு. க. பொதுச் செயலாளர் வைகோ -

'தடைகளைத் தாண்டி -வளர்ச்சியை நோக்கி' எனும் 2024-25 நிதிநிலை அறிக்கை, தமிழ் நாட்டின் சமச்சீரான வளர்ச்சிக்கும், 'எல்லோருக்கும் எல்லாம்' என்னும் திராவிட இயக்க அடிப்படைக் கோட்பாட்டின் வெற்றிக்கும் அடித்தளம் அமைத்திருக்கிறது.

பா. ம. க. நிறுவுநர் ராமதாஸ் -

புதிய பாசனத் திட்டங்கள் எதுவும் அறிவிக்கப்படவில்லை. இளைஞர்களுக்கு அரசு வேலை வழங்குவதற்கான திட்டங்கள் அறிவிக்கப்படவில்லை. நெல், கரும்புக்கான கொள்முதல் விலை உயர்த்தப்படவில்லை. மொத்தத்தில் வறட்சியான வரவு - செலவு திட்டம் அமைந்துள்ளது.

தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை -

இந்த ஆண்டாவது, மக்கள் நலன் சார்ந்த திட் டங்களைச் செயல்படுத்தும் என்று நம்பியிருந்த பொதுமக்களை, திமுக அரசின் வரவு - செலவு திட்டம் நட்டாற்றில் விட்டிருக்கிறது.

முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் -

பொதுமக்கள் ஆவலுடன் எதிர்பார்த்த எரிவாயு மானியம், நியாயவிலைக் கடைகளில் கூடுதல் சர்க்கரை மற்றும் உளுத்தம் பருப்பு, மாதந்தோறும் மின்கட்டணம், பழைய ஓய்வூதியத் திட்டம், கல்விக்கடன் ரத்து உள்ளிட்டவை வரவு - செலவு திட்டத்தில் நிறைவேற்றப்படாதது பெருத்த ஏமாற்றத்தை அளித்துள்ளது. (ஐ)

# ராஜபக்ஷக்களின் கதை வரும் தேர்தலில் முடியும்

## சம்பிக்க ரணவக்க கூறுகிறார்

கொழும்பு, பெப். 21

"நாட்டில் முன்கூட்டியே பொதுத்தேர்தல் நடத்தப்படுவ தற்கான சாத்தியம் உள்ளது, அத்தேர்தலில் ராஜபக்சக்கள் மக்களால் முழுமையாக துடைத்தெறியப்படுவார்கள்." - என்று ஐக்கிய குடியரசு முன் னணியின் தலைவரும், பாராளு மன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

நாடு இன்னும் இருள்சூழ்ந்த பாதையில்தான் பயணித்துக் கொண்டி ருக்கின்றது. எதிர் வரும் மார்ச் மாதம் என்பது தீர்க்கமானது. இதனால் முன் கூட்டியே ஆட்சியாளர்களால் தேர்தல் நடத்தப்படலாம். அது உள்ளாட்சிச் சபை, மாகாண சபை தேர்தலாக இருக்காது. பொதுத்தேர்தலாகவே அமையும். அத்தேர்தலில் யார் வெற்றிபெறுவார்கள் என்பதும் தெரியாது. ஆனால் இந்த நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டுவருவதற்கு பொறுப்புக்கூற வேண்டிய ராஜ பக்சக்கள் நிச்சயம் துடைத் தெறியப்படுவார்கள்.

பொதுஜன பெரமுன கட் சிக்கு 9 வீத வாக்குகள் மட் டுமே உள்ளது. அம்பாந் தோட்டை மாவட்டத்தில் மட்டுமே ஒரு ஆசனத்தை பெறக்கூடிய சூழ்நிலை காணப் படுகின்றது.

அதேவேளை, எமது பிராந் தியத்தில் மாலைதீவில் ஜனா திபதி தேர்தல் முடிந்துவிட் டது, பொதுத் தேர்தல் நடத்தப் படாக வேண்டும். பங்களாதே ஷில் நடந்து முடிந்துவிட்டது. பாகிஸ்தானிலும் தேர்தல் நடைபெற்றது. இதனால் இலங் கைக்கு பாரிய தாக்கங்கள் எது வும் ஏற்படவில்லை. இந்தியா வில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் பிரதமர் மோடி வெற்றிபெறுவார். எனவே, இங்கு ஆட்சிக்கு வருவது யாராக இருந்தாலும் பொரு ளாதாரத்தில் பலமாக வளர்ந்து வரும் இந்தியாவுடன் கொடுக் கல் - வாங்கலில் ஈடுபட்டே ஆகவேண்டும்.

அடுத்தது அமெரிக்காவில் ஏற்படும் மாற்றம் எமக்கு தாக் கம் செலுத்தாது. சட்ட ரீதியி லான தடங்கள் இல்லையெனில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெறுவார்- என்றார். (அ)




# போராட்டத்தில் குதித்தனர் யாழ்.பல்கலை மாணவர்கள்

யாழ்ப்பாணம், பெப். 21

யாழ்ப்பாண பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீட மாணவர்கள் நேற்று வகுப்பு பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழ இராமநாதன் நுண்கலைப்பீட இசைத்துறையில் 4ஆம் வருடத் தில் கல்வி கற்கவேண்டிய நாம், 3ஆம் வருட 2ஆம் அரையாண் டில் கற்கிறோம். எனவே எமது விரிவுரை செயற்பாடுகளை துரி தப்படுத்த வேண்டும் என கோரியே மாணவர்கள் போராட் டத்தில் ஈடுபட்டனர். (அ)

# தொல்புரத்தில் 15 வயது சிறுமியை கடத்திய 17 வயது சிறுவன் கைது!

## சிறுமி வைத்தியசாலையில் அனுமதி

யாழ்ப்பாணம், பெப். 21

யாழ்ப்பாணத்தில் 15 வயது சிறுமியை கடத்தி சென்று , தனது வீட்டில் தங்க வைத்திருந்த 17 வயது சிறுவனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில் உள்ள தொல்புரம் பகு தியைச் சேர்ந்த 15 வயது சிறு மியை காணவில்லை என கடந்த ஞாயிற்றுக்கிழமை வட்டுக் கோட்டை பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் , அப்பகுதியை சேர்ந்த 17 வயதுடைய சிறுவன் ஒருவனின் வீட்டில் சிறுமி தங்க வைக்கப்பட்டுள்ளதாக கிடைக் கப்பெற்ற தகவலின் அடிப் படையில் , வீட்டிற்கு விரைந்த பொலிஸார் சிறுமியை மீட்டது டன் சிறுவனை கைதுசெய்தனர்.

மீட்கப்பட்ட சிறுமியை வைத்திய பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலை யில் ஒப்படைத்த பொலிஸார் கைது செய்யப்பட்ட சிறுவனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# மாமனை பொல்லால் தாக்கி கொலை செய்தார் மருமகன்!

## பேராதனையில் கொடூரம்

கொழும்பு, பெப். 21

தனது மாமனாரை மருமகன் பொல்லால் தாக்கி கொலை செய் துள்ள கொடூர சம்பவமொன்று பேராதனை பொலிஸ் பிரிவுக்குட் பட்ட நெல்லிகல, கூருகம தோட் டத்தில் இடம்பெற்றுள்ளது.

51 வயதான மாரிமுத்து தர்ம சீலன் என்ற நான்கு பிள்ளைக ளின் தந்தையொருவரே இவ் வாறு கொலை செய்யப்பட்டுள் ளார் என்று பொலிஸார் தெரி வித்தனர்.

கொலை செய்யப்பட்ட நபரின் மூத்த மகளை மணம் முடித்த நபரே இந்த செயலில் ஈடுபட்டுள்ளார்.

தனது மனைவியை பிரிந்து வாழும் அவர், தனது பிள்ளை யைப் பார்க்கவேண்டும் எனக் கூறி நேற்று கூருகம தோட்டத் துக்கு வந்துள்ளார்.

நண்பர்களுடன் இணைந்து மது அருந்தியுள்ளார். பின்னர் மாமனாருடன் வாய்த்தர்க்கத் தில் ஈடுபட்டுள்ளார். இருவருக் குமிடையில் வாக்குவாதம் ஏற் பட்டுள்ளது. இதன்போது மாம னாரை அவர் பொல்லால் தாக்கி யுள்ளார்.

தாக்குதலுக்கு இலக்கான நபர் உயிரை பாதுகாத்துக் கொள்வதற்காக அங்கிருந்து ஓடியுள்ளார். இந்நிலையில் நேற்றுக் காலை தோட்ட பங் களா பகுதியில் உயிரிழந்த நிலையில் கிடந்துள்ளார்.

சடலத்தை கண்ட தோட்ட கங்காணி அது தொடர்பில் தோட்ட முகாமையாளருக்கு அறிவித்துள்ளார். பின்னர் தோட்ட நிர்வாகத்தால் பேரா தனை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வருகைதந்த பேரா தனை பொலிஸார் பரிசோத னைகளை மேற்கொண்டனர். தடயவியல் பொலிஸாரும் வருகை தந்திருந்தனர். கண்டி மாவட்ட பதில் நீதவானும் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண் டார்.

சந்தேக நபரை கைது செய்வ தற்கான நடவடிக்கையில் பேரா தனை பொலிஸார் இறங்கியுள் ளனர். அ)

# வடக்கு ஆளுநர் சார்ள்ஸுடன் யாழ். படைகளின் தளபதி சந்திப்பு!

வடமராட்சி, பெப். 21

வடக்கு ஆளுநரின் பணி மனையில் ஆளு நர் பி. எஸ். எம். சார்ள் ஸுடன் யாழ். பிராந் திய படைத் தலைமை யகக் கட்டளைத் தள பதி மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்க



ஆளுநர் பணி மனையில் நடைபெற்ற இந்த சந்திப்பில் யாழ்ப்பாண பிராந் தியத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கை உரிய வகையில் முன்னெடுத்து செல லல், பொது மக்களின் நாளாந்த வாழ்வியல் செயல்பாடுகளின் போது தேவையான பாது காப்பை பெற்றுக் கொடுத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர் பில் இந்த சந்திப்பின் போதே கலந்துரையாடப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் மீள குடி யேற்றப்பட்டவர்களுக்காக படையினரால் முன்னெடுக்கப் பட்டு வரும் வீட்டுத்திட்டம் தொடர்பிலும் இதன் போது பேசப்பட்டது.

(ஐ- 02)

# ஹெரோயின் நுகர முற்பட்ட நான்கு இளைஞர்கள் கைது!

யாழ்ப்பாணம், பெப். 21

யாழ்ப்பாணத்தில் ஹெரோ யின் போதைப்பொருளை நுகர்வதற்கு தயார் நிலையில் இருந்த நான்கு இளைஞர்களை பொலிஸார் கைதுசெய்துள்ள னர்.

கோண்டாவில் - இரு பாலை வீதியில் உள்ள இரகசிய இடமொன்றை இளைஞர்கள் போதைப்பொருள் நுகர்வுக்கு பயன்படுத்துவதாக கோப்பாய் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் அப்பகுதிக்கு பொலிஸார் விரைந்து சென்றனர்.

அங்கு நான்கு இளைஞர்கள் போதைப்பொருளை நுகர்வ தற்கு தயாராக போதைப் பொருட்களுடன் காணப்பட்ட நிலையில் அவர்களை பொலிர் கைதுசெய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களி டம் இருந்து, 5 கிராம் ஹெரோ யின் போதைப்பொருளும் , ஊசியும் (சிறிஞ்) மீட்கப்பட் டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களி டம் முன்னெடுக்கப்பட்ட விசா ரணைகளில் , குருநகர் பகுதியை சேர்ந்தவரிடம் இருந்து தான் இந்த போதைப்பொருட்களை கொள்வனவு செய்வதாக தெரி வித்துள்ளனர்.

போதைப்பொருளை விற் பனை செய்தவரை அடையா ளம் கண்டுள்ள பொலிஸார் அவரை கைது செய்வதற்கு நட வடிக்கை எடுத்துள்ளனர்.

# யாழில் பெண் மீது வாள்வெட்டு; ஒருவர் பொலிஸாரினால் கைது

யாழ்ப்பாணம், பெப். 21

கோப்பாய் பகுதியில் நேற்று முன்தினம் பெண்ணொருவர் மீது வாள் வெட்டு தாக்குதலை மேற்கொண்ட குற்றச்சாட்டில் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பில் பொலிஸாரினால் தேடப்பட்டு வந்த நபரே இவ் வாறு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை குறித்த வாள் வெட்டுத் தாக்குதலில் காயம டைந்த பெண் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு சிகிச்சை பெற்று வரு கின்றார். இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணை களை கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# உள்ளூராட்சித் தேர்தலுக்கே நடுங்கும் அரசு சர்வஜன வாக்கெடுப்பை நடத்த முன்வருமா?

## கேள்வி எழுப்புகின்றார் சரித ஹேரத்

கொழும்பு, பெப். 21
"உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்துவதற்கே நடுங்கிய அரசு, சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்லுமா? எனவே, நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை இல்லாதொழிக்க முன்னெடுக்கப்படும் முயற்சி வெற்றியளிக்காது. ஜனாதிபதி தேர்தலை நடத்தியே ஆகவேண்டும்."

இவ்வாறு டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபையின் பாராளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைப்பதற்கு அரசமைப்பில் இடமில்லை. எனினும், இதற்கான முயற்சி குறுக்கு வழியில் இடம்பெற்றால் அதனை எதிர்ப்போம். வீதியில் இறங்குவோம்.

ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைப்பதென்பது தற்போதைய ஜனாதிபதி நவம்பர் மாதத்துக்கு பின்னரும் பதவியில் இருப்பார் என்பது அல்ல, நவம்பர் மாதத்துக்கு பிறகு ஜனாதிபதியொருவர் இருக்கமாட்டார். இது நாட்டில் அரசமைப்பு நெருக்கடி நிலைமையை ஏற்படுத்தும். நிறைவேற்று அதிகாரத்தில் வெற்றிடம் ஏற்படும். இது பாரதூரமான நிலைமையாகும். ஜே.வி.பி. பிரச்சினையின் போதுகூட 88 காலப்பகுதியில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டது.

எனவே, நவம்பர் மாதத்துக்கு முன்னர் தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் பெரும்பான்மை பலமும், சர்வஜன வாக்கெடுப்பும் நடத்தப்பட வேண்டும். இந்த அரசின் சாதாரண பெரும் பான்மைக்கூட (113) தள்ளாடும் நிலையிலேயே உள்ளது. உள்ளாட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கே நடுங்கிய அரசு சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்லுமா? இது நடக்காது. எனவே, ஜனாதிபதி தேர்தல் நிச்சயம் நடத்தப்படும்- என்றார். (அ)

# பிஸ்கட் பொதிக்குள் புகையிலை துண்டுகள்

## சந்தேகநபர் கைது

கொழும்பு, பெப். 21
கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையிலுள்ள சந்தேக நபர் ஒருவரை பார்ப்பதற்காகச் சென்ற நபர் ஒருவர், தான் கொண்டு வந்த பிஸ்கட் பொதிக்குள் புகையிலை துண்டுகளை மறைத்து வைத்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் காமினி பி. திஸாநாயக்க இதனை தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர் கொண்டு வந்த பொதியை சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் சோதனையிட்ட போதே இவை கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் சந்தேகநபர் பொரளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# பழுதடைந்த உணவுகளை விற்பனை செய்த உணவகங்களுக்கு அபராதம்!

யாழ்ப்பாணம், பெப். 21
யாழ்ப்பாணத்தில் பழுதடைந்த உணவுகளை விற்பனை செய்த உணவகங்களுக்கு 137,000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

நாவாந்துறை பகுதியிலுள்ள உணவகம் ஒன்றில் சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது, பழுதடைந்த உணவை விற்பனைக்கு வைத்திருந்த குற்றச்சாட்டில் உணவக உரிமையாளருக்கு எதிராக யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

இந்நிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது உரிமையாளர் குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையில், குறித்த நபருக்கு நீதிமன்றத்தினால் 72,000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று புத்தூர் பகுதியிலுள்ள உணவகம் ஒன்றில் பழுதடைந்த உணவை விற்பனைக்கு வைத்திருந்த குற்றச்சாட்டில் உரிமையாளருக்கு எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது உரிமையாளர் குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டதை அடுத்து அவருக்கு 65,000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஆசிய பசுபிக் மாநாட்டின் தலைவராக மகிந்த அமரவீர

கொழும்பு, பெப். 21
ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் 37ஆவது ஆசிய பசுபிக் மாநாட்டின் அடுத்த இரண்டு வருடங்களுக்குத் தலைவராக விவசாயம் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று ஆரம்பமான 37 ஆவது ஆசிய பசுபிக் பிராந்திய ஆரம்ப அமர்வில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, 2024ஆம் ஆண்டு முதல் 2026ஆம் ஆண்டு வரை



இலங்கை மன்றத்தின் தலைமைப் பதவியை வகிக்கும் எனவும், அதற்கான பொறுப்பு விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீரவுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வெளிச்செல்லல் வரியை குறைக்க அரசு தீர்மானம்

கொழும்பு, பெப். 21
பயணிகள் போக்குவரத்து படகு மற்றும் சுற்றுலா கப்பல்கள் மூலம் இலங்கையிலிருந்து வெளியேறிச் செல்லும் பயணிகளிடமிருந்து அறிவிடப்படும் வெளிச்செல்லல் வரியை குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான யோசனையொன்றுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவை பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அதற்கமைய பயணிகள் போக்குவரத்துப் படகுகள் மற்றும் கப்பல்கள் மூலம் இலங்கையிலிருந்து வெளியேறிச் செல்லும் பயணிகளிடமிருந்து தற்போது அறிவிடப்படும் வெளிச்செல்லல் வரி முறையே 5 அமெரிக்க டொலர்கள் மற்றும் 20 அமெரிக்க டொலர்களாகக் குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், படகுப் பயணி ஒருவருக்கு 60 கிலோ வரையான பயணப் பொதிகளுக்கான கட்டணத்தை விலக்களிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன குறிப்பிட்டுள்ளார். (அ)

# இரு தரப்பினருக்கு இடையில் மோதல்

## ஐவர் காயம்

கிளிநொச்சி, பெப். 21
கிளிநொச்சி - இராமநாதபுரம் பகுதியில் இருதரப்பினருக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் 5 பேர் பலத்த காயமடைந்துள்ளனர்.

குறித்த மோதலில் இரண்டு ஆண்களும், 3 பெண்களும் காயமடைந்த நிலையில், கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் இரண்டு பேர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

தனிப்பட்ட முரண்பாடு ஒன்று காரணமாக, ஏற்பட்ட வாய்த்தர்க்கம் பின்னர் மோதலாக மாறிய நிலையில், ஆயுதம் ஒன்றினால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக காவல்துறையினர் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

காயமடைந்தவர்கள் 28 முதல் 50 வயதிற்கு இடைப்பட்டவர்கள் என்பதுடன் அவர்கள் வவுனியாவைச் சேர்ந்தவர்கள் என காவல்துறை தெரிவித்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் 24, 33 மற்றும் 59 வயதுகளையுடைய மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பில், இராமநாதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# கல்வியியல் கல்லூரி மாணவர்களின் உணவுக் கொடுப்பனவு அதிகரிப்பு!

கொழும்பு, பெப். 21
தேசிய கல்வியியல் கல்லூரிகளில் பயிற்சி பெறும் ஆசிரிய மாணவர்களின் உணவுக்கான கொடுப்பனவை அடுத்த மாதம் முதல் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அலகப்பெரும பாராளுமன்றில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் எழுப்பிய வினாவுக்கு பதிலளிக்கும் போதே, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இந்த விடயத்தை தெரிவித்தார்.

கல்வியற் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு, 10 ஆயிரம் ரூபாய் கடன் பெறுவதற்கான யோசனை ஒன்று ஆரம்பத்தில் முன்வைக்கப்பட்டது.

எனினும் அதற்கு மாணவர்கள் விருப்பம் தெரிவித்திருக்கவில்லை. இந்நிலையில், அவர்களுக்கான உணவுக்கு தற்போது வழங்கப்படும் கொடுப்பனவை 5 ஆயிரம் ரூபாயில் இருந்து 8 ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பி தற்கான யோசனை ஒன்று முன் வைக்கப்பட்டது.

கடந்த வாரத்தில் அதற்கு நிதிப் பற்றிய குழு அனுமதி வழங்கியதுடன், நேற்றையதினம் அதனை உறுதிப்படுத்தியது.

இதற்கமைய, 8 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு அடுத்த மாதம் முதல் கல்வியற் கல்லூரிகளில் பயிற்சி பெறும் ஆசிரிய மாணவர்களுக்கு வழங்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

# இலங்கை இந்தியாவின் ஒரு பகுதி என்பது அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ கருத்தா?

## பாராளுமன்றத்தில் வாக்குவாதம்



கொழும்பு, பெப். 21

**இலங்கை இந்தியாவின் ஒரு பகுதி என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ கூறியமையானது அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ கருத்தா என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கேள்வி எழுப்பினார்.**

இலங்கை இந்தியாவின் ஒரு பகுதி என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ முன்வைத்த கருத்து பல்வேறு மட்டத்தில் விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த அறிக்கைக்கு எதிராக அரசியல் காட்சிகள் மற்றும் அரசியல் தலைமைகள் நாளாந்தம் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர்.

இந்த நிலையிலே விமல் வீரவன்ச நேற்று பாராளுமன்றத்தில் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அத்துடன், இந்த விடயம் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ கருத்தா அல்லது தனிப்பட்ட கருத்தா என்பதை வெளிப்படுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

மேலும், தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடு தொடர்பில் இவ்வாறான தனிப்பட்ட கருத்தை கொண்டிருக்க என்ன உரிமை உள்ளது எனவும் விமல் வீரவன்ச நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

இந்த நிலையில், குறித்த விடயம் சமூக ஊடகங்களில் திருப்பு படுத்தப்பட்டுள்ளதாக ஆளுந்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இலங்கை இந்தியாவின் ஒரு பகுதி என தெரிவித்தமையானது தேசத்துரோக குற்றம் எனவும், இது மரண தண்டனைக்குரிய குற்றம் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கை இந்தியாவின் ஒரு பகுதி என இந்தியாவில் வெளியிடப்பட்ட அறிக்கை இலங்கையின் இறைமை மற்றும் சுதந்திரத்தை நேரடியாக மீறுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த அறிக்கையின் பிரகாரம் அமைச்சர் ஹறீன் தொடர்ந்து அமைச்சர் பதவியை வகிக்க முடியாது எனவும், மறுபுறம் எமது நாட்டை வேறு நாட்டுடன் இணைப்பது தேசத்துரோகச் செயலாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றவியல் சட்டத்தின் படி, தேசத்துரோகத்திற்கான தண்டனை மரண தண்டனை எனவும், அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவும் மரண தண்டனை வழங்கக்கூடிய குற்றத்தை செய்திருப்பதால், தண்டனை வழங்க முடியும் எனவும் உதய கம்மன்பில வலியுறுத்தியுள்ளார். (அ)

# புதுக்குடியிருப்பில் திருடப்பட்ட மோ.சைக்கிள்களுடன் மூவர் கைது

முல்லைத்தீவு, பெப். 21

விசுவமடுவில் மாட்டுவண்டிச் சவாரியினை பார்வையிட வந்த ஒருவரின் மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளதாக சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

குறித்த பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாட்டு வண்டிச் சவாரி இடம்பெற்றபோது நிகழ்வில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இதன்போதே வட்டக்கச்சியில் இருந்து குறித்த நிகழ்வை பார்வையிட வந்த ஒருவரின் மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் புதுக்குடியிருப்பு பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

வழங்கப்பட்ட முறைப்பாட்டிற்கமைய புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் கைது செய்துள்ளதுடன் மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் 38, 27 ,25 வயதுடையவர்கள் என்பதுடன் குறித்த சந்தேக நபர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

# ஹறீன் பெர்னாண்டோவை பதவி விலக வலியுறுத்தி அமைச்சு முன் போராட்டம்!

கொழும்பு, பெப். 21

அமைச்சர் ஹறீன் பெர்னாண்டோ அண்மையில் வெளியிட்ட கருத்துக்கு எதிராக சுற்றுலாத்துறை அமைச்சுக்கு முன்பாக போராட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

சமீபத்தில் இந்தியாவில் இடம்பெற்ற சுற்றுலா தொடர்பான நிகழ்வின் போது அவர் தெரிவித்த கருத்தைகளையடுத்து அவர் பதவி விலக வேண்டும் என்று போராட்டக்காரர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்திய சுற்றுலாப் பயணிகளுக்காக இலங்கையை ஊக்குவிக்கும் சுற்றுலா நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் ஹறீன் பெர்னாண்டோ, இலங்கை இந்தியாவின் ஓர் அங்கமாக இருந்ததாகக் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சரின் இந்த கருத்துக்கு கண்டனம் தெரிவித்தும், பதவி விலக வலியுறுத்தியும் பல்வேறு அமைப்புகள் போராட்டத்தில் ஈடுபட்டன. (அ)

# முரண்பாடுகளை உருவாக்குவதற்கு முனைப்பு காட்டும் அரசியல்வாதிகள்

## பௌத்த தேரர் ஆதங்கம்

கொழும்பு, பெப். 21

வாக்குகளுக்காகக் காத்திருந்து நாட்டை அபிவிருத்தி செய்வதில் நம்பிக்கை இல்லை என மல்வத்து பிரிவின் பிரதம தலைவர் வணக்கத்திற்குரிய திப்பட்டுவே ஸ்ரீ சுமங்கல நஹிமியன் தேரர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தேசிய ஒற்றுமையை உருவாக்க பல விடயங்களைச் செய்யும் போது, இந்த அரசியல்வாதிகள் அவற்றை அழிப்பதோடு, ஒற்றுமையையும் அழிக்கிறார்கள் என அவர் கூறினார்.

உண்மை, ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் குழுவை சந்தித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

நல்லிணக்கத்துடன் வாழ்ந்த மக்கள் மத்தியில் இன, மத முரண்பாடுகளை உருவாக்குவதற்கு பேராசை பிடித்த அரசியல்வாதிகள் முனைப்பு காட்டுகின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் நிறைவேற்று ஜனாதிபதி பதவியை ஒழிக்க வேண்டும் என்று பேசுகின்றனர் எனவும் இவர்கள் எப்போதும் மக்களை ஏமாற்றிக்கொண்டே இருக்கிறார்கள் எனவும் அவர் ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.

# காலிமுகத்திடலில் அரகலய நடந்த பகுதியில் அமையும் சூதாட்ட விடுதி

## பாராளுமன்றத்தில் விஜித ஹேரத்

கொழும்பு, பெப். 21

காலிமுகத்திடலில் கோட்டா கோ கம பகுதியை கசினோ மையமாக மாற்றுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என ஜேவிபியின் விஜித ஹேரத் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அரகலய இடம்பெற்ற பகுதியில் சீன பெயர் ஒன்றை கொண்ட நிறுவனம் கசினோ விடுதியை அமைப்பதற்கு அனுமதி கோரியுள்ளது. அரசாங்கம் நகரஅபிவிருத்தி அதிகாரசபை மூலம் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது என விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பை சேர்ந்த பிரபல சூதாட்ட வர்த்தகர் இதன் பின்னணியில் உள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரகலய என்பது இலங்கை வரலாற்றில் ஒரு திருப்புமுனை என தெரிவித்துள்ள விஜித ஹேரத், அரகலயவில் ஈடுபட்டவர்களை பழிவாங்குவதற்காக அரசாங்கம் இதனை செய்கின்றது. இது பெருந்தவறு என குறிப்பிட்டுள்ளார். (அ)

# ஜனாதிபதிக்கும் எனக்கும் இடையே தனிப்பட்ட அரசியல் தொடர்புண்டு!

## கூறுகின்றார் சரத் பொன்சேகா



கொழும்பு, பெப். 21

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் தனக்கும் தனிப்பட்ட ரீதியிலான அரசியல் தொடர்பு மற்றும் நெருக்கம் இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து சரத் பொன்சேகாவை விலக்குவதற்கு எதிரான நீதிமன்றத் தடை உத்தரவைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் நீதிமன்ற வளாகத்தில் வைத்து செய்தியாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க எனது முன்னாள் தலைவர் மட்டுமன்றி என்னை அரசியலுக்கும் கொண்டுவந்தவர் அவர்தான்.

அவருக்கும் எனக்கும் இடையிலான தொடர்பு அரசியல் ரீதியானது அல்ல. தனிப்பட்ட ரீதியிலானது.

அதே நேரம் , மக்கள் விடுதலை முன்னணியுடன் இணைந்து அரசியல் செய்வது குறித்து நான் ஒருபோதும் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# யாழ். பல்கலை முகாமைத்துவ பீடத்தில் தொழில்வாய்ப்பு சந்தை

# 43 தொழில் வழங்குநர்களிடம் தொழில் பெறுவதற்கு சந்தர்ப்பம்!

யாழ்ப்பாணம், பெப். 21

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் தொழிற் சந்தை நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9:00 மணி முதல் கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கில் அமைந்துள்ள முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீட வளாகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக தொழிற்றுறைத் தொடர்பு மையம் மற்றும் தொழில் வழிகாட்டல் அலகு ஆகியவை இணைந்து நடாத்தும் இந்தத் தொழில் வாய்ப்பு சந்தை - 2024 இற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் என். கெங்காதரன் தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் குறிப்பிடுகையில், இத் தெழில் வாய்ப்பு சந்தையின் பிரதான நோக்கமாக அமைவது நான்காம் வருட இரண்டாம் அரையாண்டு மாணவர்களுக்கான பயிற்சி வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதாகும். இந்தத் தொழில் வாய்ப்புச் சந்தையில் கணக்கியல், நிதியியல், மனிதவள, சந்தைப்படுத்தல், வணிகத் தொழிநுட்பம் , தொடர்பாடல் மற்றும் ஆடை உற்பத்திகளில் ஈடுபடும் சுமார் 43 தொழில் வழங்குநர்கள் கலந்து கொள்ளவுள்ளதுடன், சுமார் 800 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு தமது தொழில் வாய்ப்புகள் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் தவிர, தொழில் தேடும் இளைஞர், யுவதிகள், உயர் தொழில் நுட்பவியல் நிறுவன மாணவர்கள் உட்பட ஆர்வமுடைய சகலரும் பங்குபற்றிப் பயனடைய முடியும் என்றும், சமீபத்தில் தமது பீடத்தில் பட்டப்படிப்பை நிறைவு செய்த மாணவர்களுக்கான தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் தொழிற்றுறை நிறுவனங்களுடன் மாணவர்கள் மற்றும் ஊழியர்களின் தொடர்புகளை விருத்தி செய்தல் என்பன இத் தொழில் வாய்ப்புச் சந்தையின் துணை நோக்கங்களாகக் காணப்படுகின்றன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# மணல் அகழ்வதற்கான அனுமதியை புதுப்பிப்பதற்கு அரசியல் செல்வாக்கு!

## இராஜாங்க அமைச்சருக்கு எதிராக சவப்பெட்டியுடன் உண்ணாவிரதம்



மட்டக்களப்பு, பெப். 21

இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரனின் அதிகார துஷ்பிரயோகத்துக்கு ஆளாகாமல் செங்கலடி பிரதேச செயலாளர் சட்டப்படி தமது கடமையை புரியுமாறும், இராஜாங்க அமைச்சரை ஏறாவூர் பற்று பிரதேச அபிவிருத்தி குழு தலைவர் பதவியை பறிக்குமாறு கோரியும், சவப்பெட்டியுடன் இருவர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கல், மண் மற்றும் கிறவல் அகழ்வில் சட்ட ரீதியாக ஈடுபட்டு வரும் இருவரே, மட்டு-செங்கலடி பிரதேச செயலகத்துக்கு அருகில், சவப்பெட்டியுடன் சாகும்வரை உண்ணாவிரத போராட்டத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஈடுபட்டனர்.

கல், மண் மற்றும் கிறவல் என்பனவற்றை சட்ட ரீதியாக அனுமதி பெற்று அகழ்வில் ஈடுபட்டு வருபவர்களின் 2024 ஆண்டு அனுமதியை புதுப்பிக்க இராஜாங்க அமைச்சரின் சிபார்சு வேண்டும் என பிரதேச செயலாளர் அனுமதிப் பத்திரத்தை புதுப்பிக்க மறுத்து வருவதை அடுத்தே இராஜாங்க அமைச்சரின் அதிகார துஷ்பிரயோகத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த சாகும்வரை உண்ணாவிரத போராட்டத்தை அவர்கள் ஆரம்பித்தனர்.

இது தொடர்பாக உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வரும் இருவரும் கருத்து தெரிவிக்கையில்

"செங்கலடி பிரதேசத்தில் கல், மண் மற்றும் கிறவல் என்பனவற்றுக்கு சட்டரீதியாக அனுமதி பெற்று பலரும் அகழ்வு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந் நிலையில் 2023 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் அனுமதிப்பத்திரம் கால வதியானதை அடுத்து 2024 ம் ஆண்டு அதனை புதுப்பிப்பதற்கு, அகழ்வு பணியில் ஈடுபட்டுவருபவர்கள் பிரதேச செயலகத்திற்கு சென்றால் பிரதேச செயலாளர், இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் சிபார்சு வழங்கினால் மட்டும் அதனை புதுப்பித்து தரமுடியும் எனக்கூறி புதுப்பிக்க மறுப்பு தெரிவித்து வருகின்றார்.

இதனையடுத்து மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்து பல பிரச்னைகளை முன்வைத்தோம். அவர் அந்த கடிதத்தை பிரதேச செயலாளருக்கு அனுப்பியுள்ளதாக தெரிவித்தார். ஆனால், இதுவரை பதில் எதுவும் இல்லை.

நாங்கள் புதிதாக ஒன்றும் கேட்கவில்லை. கல், மண் மற்றும் கிறவல் அகழ்வதற்கு அது சார்ந்த திணைக்களங்கள் பரிசோதனை செய்து அதற்கான அனுமதியை வழங்கி நாங்கள் ஏற்கனவே அகழ்வுப் பணியினை மேற்கொண்டுவருகின்றோம்.

ஒவ்வொரு கல் குவாரியிலும் 10 இற்கு மேற்பட்டவர்கள் வேலை செய்கின்றனர். இவ்வாறு 300 இற்கு மேற்பட்டவர்கள் வேலை செய்துவருகின்றனர். இவர்களது வாழ்வாதாரமே இதுதான்.

இராஜாங்க அமைச்சரை தனிப்பட்ட முறையில் சந்தித்தால்தான் அனுமதி வழங்கப்படும் என்றால் இதில் யார் அதிகாரிகள்? அரசியல் ரீதியாகவா அல்லது பேரம் பேசுவதற்கா ?

இவ்வளவு காலமும் அனுமதிப்பத்திரம் வழங்க அரசியல் இருந்ததே இல்லை. இந்த முறைதான் அனுமதிப் பத்திரங்களை புதுப்பிப்பதில் அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்டுள்ளனர். எங்கள் பிரதேசத்தில் அபிவிருத்திக்குழு என்ற அதிகாரத்தை வைத்துக் கொண்டு அவருக்கு ஏற்றமாதிரி அதிகாரிகளை துஷ்பிரயோம் செய்து வருகின்றார்-என்றனர். (அ)



# மட்டக்களப்பு கல்லடி வேலூர் சக்தி வித்தியாலயம் தரமுயர்வு

மட்டக்களப்பு, பெப். 21

மட்டக்களப்பு வேலூர் சக்தி வித்தியாலயத்தில் புதிதாக தரம் 10 மற்றும் 11ஆம் தரங்களுக்கான வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு, பாடசாலை தரமுயர்த்தப்பட்டுள்ளது.

கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக தரம் ஒன்பது வரை மாத்திரமே இப் பாடசாலையில் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெற்று வந்தது.

பொதுமக்கள் ,பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ,பாடசாலை பழைய மாணவர்கள், பாடசாலை நலன் விரும்பிகள் , பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள்,

பாடசாலை முன்னாள் அதிபர்கள் ஆசிரியர்கள் ஆகியோரின் முயற்சியால், கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் சுஜாதா குலேந்திரகுமார் மற்றும் இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் ஆகியோரிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, தரம் 10 மற்றும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு, பாடசாலை தரமுயர்த்தப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் எஸ் பிரான்சிஸ் தலைமையில், பாடசாலை தரமுயர்த்தும் சம்பிரதாய நிகழ்வு நடைபெற்றது.

ஆன்மீக அதிதியாக சுவாமி சுராஜ் சிதானந்தா மகராஜ் கலந்துகொண்டதுடன், பிரதம அதிதியாக கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனும், கௌரவ அதிதியாக பிரதி கல்வி பணிப்பாளர் (நிர்வாகம்) ஷாமினி ரவிராஜூம், சிறப்பு அதிதியாக பிரதி கல்விப்பணிப்பாளர் ஹரணியா சுபாஸ்கரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இப்பாடசாலையில் கல்வி பயிலும் விசேடதேவையுடைய மாணவர்களை பார்வையிட்ட இராஜாங்க அமைச்சர், அவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்குத்

தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாகவும் உறுதியளித்தார். (அ)

# கொக்கட்டிச்சோலைப் பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

## ஒருவர் பொலிஸாரால் கைது

மட்டக்களப்பு, பெப். 21

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள முனைக்காடு களப்பு பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்றை பொலிஸார் முற்றுகையிட்டனர்.

இதன்போது, 150 போத்தல் கசிப்புடன் ஒருவரை கைது செய்ததுடன், 3 இலட்சத்து 50 ஆயிரம் மில்லி மீற்றர் கோடா, உற்பத்தி உபகரணங்கள் மற்றும் மோட்டர் சைக்கிள் ஒன்று மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# கிழக்கு புனர்வாழ்வு பொறுப்பதிகாரியாக லெப்டினன்ட் கேணல் சனத் அபேதிலக

மட்டக்களப்பு, பெப். 21

கிழக்கு மாகாண புனர்வாழ்வு பொறுப்பதிகாரியாக லெப்டினன்ட் கேணல் சனத் அபேதிலக மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள புனர்வாழ்வு அலுவலகத்தில் வைத்து நேற்று முன் தினம் திங்கட்கிழமை கடமையை பொறுப்பேற்றுள்ளார் .

போதைப்பொருள் பாவனையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு வழங்கி சமூகத்துடன் இணைப்பாக்கம் செய்வதுடன் பாடசாலை மாணவர்கள் மற்றும் சமூக மட்டத்தில் போதைப்பொருள் முற்தடுப்பு விழிப்புணர்வு செயற்பாடுகளை இப்புனர்வாழ்வு நிலையம் முன்னெடுத்து வருகின்றது.

முன்னாள் பொறுப்பதிகாரி லெப்டினன்ட் கேணல் சன்டிக்க எகலப்போல மாவட்ட செயலகத்துடன் இணைந்து போதைப் பொருள் முற்தடுப்பு நிகழ்ச்சித் திட்டங்களை முன் னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# இ.போ.ச பஸ் சாரதி, நடத்துநரால் பெண்ணுக்கு நேர்ந்த அவலநிலை!

திருமலை, பெப். 21

திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பெண்ணை இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் சாரதியும், நடத்துநரும் இடைநடுவில் இறக்கி விட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 18ஆம் திகதி குறித்த பெண் பேருந்தில் பயணித்துக் கொண்டிருந்த போது சாரதி பஸ்ஸை மிகவும் வேகமாகச் செலுத்தியுள்ளார்.

இதனால் அதிர்ச்சியடைந்த குறித்த பெண் உயிர் அச்சத்தால், பஸ்ஸை அளவான வேகத்தில் செலுத்துமாறு கேட்டுக் கொண்டார்.


ஆனால், அந்த சாரதி அவ்வாறு மெதுவாக செலுத்த முடியாது என்றும், அந்த பெண்ணை கீழே இறங்குமாறும் வற்புறுத்தினார்.

பின்னர் சாரதியும் நடத்துநரும் இணைந்து அந்த பெண்ணை இடையில் இறக்கி விட்டனர்.

இலங்கையில் சமீபக் காலமாக பஸ் விபத்துக்கள் அதிகரித்துவரும் நிலையில் பேருந்தில் பயணிக்கும் பயணிகள் உயிரை கையில் பிடித்தவாறே பயணம் செய்கின்றனர்.

குறித்த பெண்ணுக்கு இ.போ.ச பஸ் சாரதி மற்றும் நடத்துநரால் இழைக்கப்பட்ட அநீதியானது மிகவும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (அ)

# விரிவுரையாளர் சேவையிலிருந்து ஓய்வுபெற்றார் ஜமால்தீன்



அம்பாறை, பெப். 21

தென்கிழக்கு பல்கலைக்கழ கத்தின் வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் கணக்கியல் துறையின் முதன்மை விரிவுரையாளர்களில் ஒருவரான விரிவுரையாளர் ஏ. ஜமால்தீன் நேற்று முன்தினம் தனது பல்கலைக்கழக விரிவுரையாளர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

தென்கிழக்கு பல்கலைக்கழ கத்தின் ஆரம்ப உருவாக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு இவர் பின்னாளில் வர்த்தக முகாமைத்துவ பீடத்தில் நிரந்தர விரிவுரையாளராக 15.11.1996 ஆந் திகதி தன்னை பல்கலைக்கழக சேவையில் இணைத்து கொண்டார்.

தென்கிழக்கு பல்கலைக்க ழகத்தில் 27 வருடங்களுக்கு மேலாக தனது அளப்பெரிய விரிவுரை பணியை சிறப்பாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் மேற்கொண்டு பல்வேறுபட்ட மாணவச் செல்வங்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டிய ஒரு பெருந்தகை இவர்.

பல்கலைக்கழகத்தின் உரு வாக்கத்தின் ஆரம்ப காலத்தில் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கி இன்றைய எமது பல்கலைக்கழகத்தின் உயர்வு நிலைக்கு அர்ப்பணித்து பாடுபட்டவர்களில் இவரும் பிரதானமானவராக கருதப்பட்டவர்.

தனது சேவைக் காலத்தில் பல்வேறுபட்ட மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் சார் பான நிகழ்ச்சி திட்டங்களை பல்கலைக் கழகத்தில் முன்னெடுத்துச் சென்றவர் அதிலும் குறிப்பாக பல்கலைக்கழகத்தின் தொழில் வள ஆலோ சனை நிலையத்தின் பணிப்பாளராகவும் பணியா ளர் மேம்பாட்டு நிலைய பணிப்பாளராகவும் திறம்பட கடமையாற்றியவர். (அ)



## ஐ. பி. எல். தொடர்:

# துஷ்மந்தவை வாங்கியது கொல்கத்தா நைற் ரைடர்ஸ்

மும்பை, பெப். 21

ஐ. பி. எல். தொடரில் இலங்கையின் துஷ்மந்த கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணிக்கு விளையாடவுள்ளார்.

2024ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல் தொடர் வரும் மார்ச் மாத இறுதியில் இந்தியாவில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தத் தொடரில் மும்பை இந்தியன்ஸ், சென்னை சுப்பர் கிங்ஸ், கொல்கத்தா நைற் ரைடர்ஸ் உள்ளிட்ட 10 அணிகள் கலந்துகொள்கின்றன.

இந்நிலையில் இந்தத் தொடருக்காக கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் இடம்பெற்றிருந்த இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் கஸ் அட்கின்சன் விலகியுள்ளார். அவருக்கு பதிலாக கொல்கத்தா அணியில் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் துஷ்மந்த சேர்க்கப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருட ஏலத்தில் கொல்கத்தா அணியால் அட்கின்சன் 1 கோடி (இந்திய) ரூபாய்க்கு ஏலம் எடுக்கப்பட்டார். இங்கிலாந்து கிரிக்கெட் சபை அட்கின்சனின் பணிச்சுமையை நிர்வகிக்க விரும்புவதால் இந்த தொடரிலிருந்து அவர் விலகுகறிார். இதையடுத்து சமீராவை ரூ. 50 இலட்சத்துக்கு கொல்கத்த நிர்வாகம் ஒப்பந்தம் செய்துள்ளது. (ஐ)

# இலங்கை - பங்களாதேஷ் தொடர் போட்டி அட்டவணை வெளியீடு!

கொழும்பு, பெப். 21

இலங்கை அணி பங்களாதேஷுக்கு சென்று 3 இருபது - 20, 3 ஒருநாள், 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான டி20 தொடர் வருகிற மார்ச் 4 ஆம் திகதி தொடங்குகிறது.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தரவரிசையில் பங்களாதேஷ் தற்போது 4ஆவது இடத்தில் உள்ளது. அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சிறப்பாக செயல்பட வேண்டிய கட்டாயத்தில் பங்களாதேஷ் உள்ளது.

கடந்த ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டு டெஸ்ட் போட்டிகளில் இலங்கை அணி தோல்வியடைந்தது. இந்த நிலையில், பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சிறப்பாக செயல்படும் முனைப்போடு இலங்கை உள்ளது.

**அட்டவணை விவரம் -**

முதல் ரி -20 - மார்ச் 4, சில்ஹெட், 2ஆவது ரி -20: மார்ச் 6, சில்ஹெட், 3ஆவது ரி -20: மார்ச் 9, சில்ஹெட்

**ஒருநாள் தொடர் -**

முதல் ஒருநாள் - மார்ச் 13, சட்டோகிராம், 2ஆவது ஒருநாள்: மார்ச் 15, சட்டோகிராம், 3ஆவது ஒருநாள்: மார்ச் 18, சட்டோகிராம்.

**டெஸ்ட் தொடர் -**

முதல் டெஸ்ட்: மார்ச் 22-26, சில்ஹெட், 2ஆவது டெஸ்ட்: மார்ச் 30 - ஏப்ரல் 3, சட்டோகிராம் (ஐ)



# ஆப்கானிஸ்தானுடனான ரி - 20 இலங்கை 72 ஓட்டங்களால் வெற்றி!

தம்புள்ளை, பெப். 21

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது இருபது - 20 போட்டியில் 72 ஓட்டங்களால் வெற்றி கொண்டது இலங்கை அணி.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஒரு டெஸ்ட், 3 ஒருநாள் மற்றும் 3 ரி-20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் டெஸ்ட் தொடரை 1-0 என்ற கணக்கிலும், ஒருநாள் தொடரை 3-0 என்ற கணக் கிலும் இலங்கை அணி கைப் பற்றியது.

இதையடுத்து இரு அணிகளுக்கும் இடையிலான ரி - 20 போட்டி தொடங்கியது. இதில், முதல் போட்டியில் இலங்கை வெற்றி பெற்றது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் இரண்டாவது ரி - 20 போட்டி ஆரம்பமானது. இதில், நாணயச் சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தான் பந்துவீச்சை தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஆரம்பத்தில் விக்கெட்களை இழந்து தடுமாறினாலும் பின்னர் அதிரடியாக விளையாடி ஓட்டங்களை குவித் தது. குறிப்பாக, சமரவிக்கிரம - மத்தியூஸ் இணை அதிரடி காட்டி யது. சிறப்பாக விளையாடிய சமரவிக்கிரம அரைச்சதம் அடித்து அசத்தினார். மத்தியூஸ் தனது பங் குக்கு ஹட்ரிக் சிக்ஸருடன் 42 ஓட்டங்களை குவித்தார்.



நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து இலங்கை அணி 187 ஓட்டங்கள் குவித்தது.

இதையடுத்து 188 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் ஆப்கானிஸ்தான் அணி களமிறங்கியது. தொடக்க வீரர்களாக களமிறங்கிய ஹஸ்ரத்துல்லா ஓர் ஓட்டத்துடனும் இப்ராஹிம் 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். தொடர்ந்து களமிறங்கிய வீரர்களும் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். அதிகபட்சமாக முகமது நபி 27 ஓட்டங்களும் கரீம் ஜனட் 28 ஓட்டங்களும் எடுத்தனர்.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தான் அணி 17 ஓவர்கள் முடிவில் 115 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் சகல விக்கெட்களையும் இழந்தது. இதையடுத்து இலங்கை அணி 72 ஓட்டங்கள் வித்தியா சத்தில் வெற்றி பெற்று தொடரையும் கைப் பற்றியது. (ஐ)

# தலைசிறந்த உதைபந்து வீரர் மெஸ்ஸி, றொனால்டோ அல்ல!



பிரஸல்ஸ், பெப். 21

உதைபந்தாட்ட உலகின் தலைசிறந்த வீரர் யார் என்பது குறித்த தனது கருத்தை தெரிவித்துள்ளார் பெல்ஜியம் நாட்டு அணியின் முன்னாள் தலைவர் எடன் ஹசார்ட். அதில், மெஸ்ஸியும் இல்லை, றொனால்டோ வும் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

உதைபந்தாட்ட உலகின் ஜாம்பவான்களின் பட்டியலில் ஆர்ஜென்ரீனாவின் மெஸ்ஸியும் போர்த்துக் கல்லின் றொனால்டோவும் நிச்சயம் இருப்பார்கள். இவர்கள் இருவரில் யார் தலைசிறந்தவர் என்ற ஒப்பீடுகள் ரசிகர்கள் மத்தியில் எப்போதுமே இருந்து கொண்டே இருக்கும். அது அவர்கள் தேசிய அணிக் காக விளையாடினாலும், கழக அணிக்காக விளை யாடினாலும் நீடிக்கும். அவ்வப் போது இருவரின் கையும் ஒருவருக்கு ஒருவர் ஓங்கி நிற்கும்.

இந்த சூழலில் இது குறித்து தனது கருத்தை எடன் ஹசார்ட் தெரிவித்துள்ளார். அவர் கலந்து கொண்ட நேர்காணல் ஒன்றில்,

'மெஸ்ஸி அல்லது றொனால்டோ: இருவரில் யார் தலைசிறந்த வீரர்?' என்ற கேள்வி முன்வைக்கப்பட்டது. என்னைப் பொறுத்தவரை மெஸ்ஸிதான். உதைபந்து குறித்து பேசினால் அவரது பெயர் நிச்சயம் நினைவுக்கு வரும். இதில் சிலருக்கு மாற்று கருத்து இருக்கலாம். றொனால்டோ சிறந்த கோல்அடிப்பாளர். அதோடு அணிக்கு கோப்பைகளைக் வென்று கொடுக்கும் தலைசிறந்த வீரரும்கூட. ஆனால், என்னைப் பொறுத்தவரையில் ஷினாடின் ஷிடேன்தான் தலைசிறந்த வீரர்” என அவர் தெரிவித்துள்ளார்.

ஷினாடின் ஷிடேன் பிரான்ஸ் நாட்டு அணிக்காக 1994 முதல் 2006 வரையில் சர்வதேச உதைபந்தாட்ட போட்டிகளில் விளையாடியவர். தாக்குதல் நடுக்கள வீரர் பிரான்ஸ் அணிக்காக 108 போட்டிகளில் விளையாடி 31 கோல்கள் பதிவு செய்துள்ளார். 1998இல் சம்பியன் பட்டம் வென்ற உலகக் கிண்ண அணியில் விளையாடியவர். 2006 உலகக் கோப்பை தொடரில் சிறந்த வீரருக்கான விருதை வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# 4ஆவது டெஸ்டில் பும்ராவுக்கு ஓய்வு?

ராஜ்கோட், பெப். 21

இங்கிலாந்து அணிக்கு எதிரான 4ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரீத் பும்ராவுக்கு ஓய்வு வழங்கப்படக்கூடும் என தகவல்கள் வெளியாகி உள்ளன. இதே வேளையில் காயத்தில் இருந்து மீண்டு உடற்தகுதியை எட்டும் நிலையில் உள்ள கே. எல். ராகுல் மீண்டும் அணிக்கு திரும்பக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கிலாந்து அணிக்கு எதிராக ராஜ்கோட்டில் நடைபெற்ற 3ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 434 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சாதனை படைத்தது. இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் இந்திய அணி 2-1 என முன்னிலை வகிக்கிறது. இந்நிலையில், இரு அணிகள் மோதும் 4ஆவது டெஸ்ட் போட்டி வரும் 23ஆம் திகதி ராஞ்சியில் தொடங்குகிறது.

இந்தப் போட்டியில் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரீத் பும்ராவுக்கு ஓய்வு வழங்கப்படக்கூடும் என தகவல்கள் வெளியாகியுள்ளது. விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற 2ஆவது டெஸ்ட் போட்டியில் பும்ரா இரு இன்னிங்ஸையும் சேர்த்து கூட்டாக 9 விக்கெட்களை வீழ்த்தி இந்திய அணியின் வெற்றிக்கு பெரிதும் உதவியிருந்தார். தற்போது வரை 17 விக்கெட்களை வீழ்த்தி இந்த தொடரில் அதிக விக்கெட்கள் வீழ்த்தியவர்களின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார் - என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நாட்டு பிரஜைகளின் தேவைகளுக்கு அரசு முன்னுரிமை வழங்க வேண்டும்!

## அமெரிக்க தூதுவர் ஜூலி சங் வலியுறுத்து



கொழும்பு, பெப். 21

**சர்வதேச சமூகம் மட்டுமன்றி நாட்டின் பிரஜைகளின் தேவைகளுக்கு செவிசாய்ப்பதற்கு இலங்கை அரசாங்கம் முன்னுரிமை வழங்க வேண்டுமென அமெரிக்க தூதுவர் ஜூலி சாங் கோரிக்கை விடுத்துள்ளார்.**

இணைய பாதுகாப்பு சட்டம் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதன்படி தவறான செயல்முறை, உள்நோக்கம் மற்றும் பேச்சு சுதந்திரத்தில் ஏற்படக்கூடிய தாக்கம் ஆகிய மூன்று அம்சங்களில் கவனம் செலுத்தி, இணைய பாதுகாப்பு சட்டம் குறித்து அவர் தீவிர கவலைகளை வெளிப்படுத்தினார்.

குறித்த சட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள வரையறைகள் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான தாக்குதல்கள் போன்ற செயல்களை எதிர்த்துப் போராடும் நோக்கத்தில் உள்ளன, ஆனால் முறையான வெளிப்பாட்டைக் கட்டுப்படுத்த தவறாகப் பயன்படுத்தப்படலாம் என்று அவர் கவலை தெரிவித்தார்.

மேலும் சட்டத்தை திருத்துவதற்கான செயல்முறை நடந்து கொண்டிருக்கும் வேளையில், சட்டத்தின் சாத்தியமான தாக்கம் குறித்த தீர்வுகளைக் காணுமா எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (அ)

# கத்தரிக்கோலால் தாக்கப்பட்டு 19 வயது இளைஞன் உயிரிழப்பு!

கொழும்பு, பெப். 21

கொழும்பு - கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இங்குருகொட சந்தியின் கால்வாய்க்கு அருகில் தலையில் கத்தரிக்கோலால் தாக்கப்பட்டு இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் கொழும்பு - கிராண்பாஸ் பிரதேசத்தை சேர்ந்த 19 வயதுடைய ருவன் குமார என்ற இளைஞராவார்.

இவர் போதைப்பொருளுக்கு அடிமையானவர் எனவும் பல்வேறு திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிராண்பாஸ் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# அனுமதியின்றி வனப்பகுதிகளுக்குள் பிரவேசிப்பவர்கள் மீது நடவடிக்கை!



கொழும்பு, பெப். 21

அனுமதியின்றி வனப்பகுதிகளுக்குள் பிரவேசிப்பவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வனப்பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

வனப்பகுதிகளில் இடம்பெறும் தீப்பரவல் சம்பவங்கள் காரணமாக, இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அந்த திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நிஷாந்த எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

நிலவும் அதிக வெப்பத்துடனான காலநிலை காரணமாக கண்டி, மாத்தளை, நுவரெலியா, பதுளை ஆகிய பகுதிகளில் உள்ள வனங்களில் தீப்பரவல் ஏற்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் முறையற்ற செயற்பாடுகள் காரணமாகவே, அதிக வனங்களில் தீப்பரவல் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக அவர் கூறினார். (அ)

# மின்சாரக் கட்டணம் முன்னர் குறிப்பிட்ட தொகையைவிட அதிகம் குறைக்கப்படும்

கொழும்பு, பெப். 21

மின் கட்டணம் முன்னர் குறிப்பிட்ட தொகையை விட அதிகமாக குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டு அது தொடர்பில் அவர்கள் தீர்மானத்தை மேற்கொள்வார்கள் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துமாறு கோரிக்கை

கொழும்பு, பெப். 21

கடந்த சில மாதங்களுடன் ஒப்பிடுகையில் மின்சார தேவை அதிகரித்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் நோயல் பிரியந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன், குறித்த நாட்களில் நீர் மின் உற்பத்தி 21 வீதமாக குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது நீர் மின்னுற்பத்தி நிலையங்களுடன் தொடர்புடைய நீர்த்தேக்கங்களின் கொள்ளளவு 83 சதவீதமாக உள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துமாறு இலங்கை மின்சார சபை மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

# குளவிக் கொட்டுக்கு இலக்கான 76 மாணவர் வைத்தியசாலையில்!

கொழும்பு, பெப். 21

பசறை பகுதியில் உள்ள பாடசாலையொன்றின் மாணவர்கள் குளவி கொட்டுக்கு இலக்கான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பசறை நகரில் உள்ள பொது விளையாட்டு மைதானத்தில் விளையாட்டு நிகழ்வுகளில் மாணவர்கள் நேற்று பங்கேற்றிருந்த போது, இந்த அனர்த்தத்திற்கு முகங் கொடுத்துள்ளனர்.

இதன்போது, குளவிக் கொட்டுக்கு இலக்கான 76 மாணவர்கள் பசறை பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தென்கிழக்கு பல்கலை. இஸ்லாமிய கற்கைகள் துறைத்தலைவராக முகம்மட் நபீஸ் நியமனம்

அம்பாறை, பெப். 21

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக அரபுமொழி மற்றும் இஸ்லாமிய கற்கைகள் பீடத்தின் இஸ்லாமிய கற்கைகள் துறைக்கு புதிய தலைவராக நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.எம். முகமட் நபீஸை உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் நியமித்துள்ளார்.

கலாநிதி எஸ்.எம். முகம்மட் நபீஸ் இஸ்லாமிய கற்கைகள் துறையின் தலைவர் பொறுப்புக்களை கையேற்கும் நிகழ்வு, அரபுமொழி மற்றும் இஸ்லாமிய கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எச்.ஏ. முனாஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின்போது பீடாதிபதி எம்.எச்.ஏ. முனாஸ் அவர்கள் நியமனக்கடிதத்தை கலாநிதி எஸ்.எம். முகம்மட் நபீஸ் அவர்களிடம் ஒப்படைத்தார். அதேவேளை குறித்த துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் ஆர்.ஏ. சர்ஜூன் அவர்கள் இஸ்லாமிய கற்கைகள் துறையின் உத்தியோகபூர்வ ஆவணங்களை புதிய தலைவர் கலாநிதி எஸ்.எம். முகம்மட் நபீஸிடம் கையளித்தார். (அ)



# அக்கரைப்பற்று திருவள்ளுவர் வித்தியாலயத்தில் கௌரவிப்பு

அம்பாறை, பெப். 21

அக்கரைப்பற்று திருவள்ளுவர் வித்தியாலயத்தில் புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

அக்கரைப்பற்று திருவள்ளுவர் வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் தங்கேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் திருக்கோவில் வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர், எஸ்.சுரநுதன் பிரதம அதிதியாகவும்,அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை வைத்திய அதிகாரி எஸ்.அகிலன் விஷேட அதிதியாகவும் கலந்து கொண்டனர். (அ)



# நிர்வாணப் படங்களை சமூக ஊடகங்களில் பகிர்வேன் என அச்சுறுத்தி வர்த்தகரான பெண்ணிடம் கப்பம் பெற்ற நபர்!

கொழும்பு, பெப். 21

வர்த்தகரான பெண் ஒருவரின் நிர்வாண படங்களை சமூக ஊடகங்களில் பகிர்ந்து விடுவதாக கூறி 25 இலட்சம் ரூபாய் கப்பம் பெற்றதாக கூறப்படும் சந்தேக நபரொருவர் தொடர்பில் கறுவாத்தோட்டம் பொலிஸார் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

இவ்வாறு குற்றம்சாட்டப்பட்டவர் , பாதிக்கப்பட்ட வர்த்தகரான பெண்ணின் வீட்டில் வேலை செய்துள்ளதுடன் நாரஹேன்பிட்டி பிரதேசத்தை சேர்ந்த இளைஞராவார்.

கொழும்பு 7 , மலலசேகர வீதியில் அமைந்துள்ள வர்த்தகரான பெண் ஒருவரின் வீடொன்றில் பணியாளராக சேவையாற்றிய இவருக்கு எதிராக கறுவாத்தோட்டம் பொலிஸார் 3 குற்றச்சாட்டுக்களின் கீழ் வழக்குத் தாக்கல் செய்துள்ள னர்.

கடந்த 2020 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 1 ஆம் திகதி முதல் 2021 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5 ஆம் திகதிக்கு உட்பட்ட காலப்பகுதிக்கு இடையில் குறித்த பெண்ணிடம் அவரது நிர்வாண படங்களை சமூக ஊடகங்களில் பகிர்வதாக அச்சுறுத்தி 25 இலட்சம் ரூபா கப்பம் பெற்றமை, அச்சுறுத்தல் மற்றும் பாலியல் துன்புறுத்தல் செய்தல் ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் பொலிஸார் இவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

## கோவிட்...

பாதிக்கப்படும் ஆபத்து எவ்வாறு அதிகரித்தது என்பதை ஆய்வு செய்தது.

ஆய்வை மேற்கொண்ட ஆராய்ச்சியாளர்கள் குழு இந்த கோவிட் தடுப்பூசிகளால் ஏற்படும் 13 பக்க விளைவு நோய்களை கண்டறிந்துள்ளது. அத்துடன், மொடர்னா, பைஸர் தடுப்பூசிகளின் மூன்று டோஸ்களையும் பெற்ற பின்னர் மாரடைப்பு நோய் ஏற்படும் அபாயம் 6.9 மடங்கு அதிகரித்துள்ளது.

ஆய்வு குறித்து கருத்துத் தெரிவித்த நிபுணர்கள், நோய்த்தடுப்பு தடுப்பூசி கோவிட் நோய் பரவுவதைத் தடுக்கும் என்பதால் அந்த ஆபத்தை எடுப்பதில் தவறில்லை - என்று போர்ப்ஸ் சஞ்சிகைக்கு தெரிவித்துள்ளனர். (ஐ)

## கடற்றொழில்...

மீனவத் தொழிற்சங்கங்களுக்கு அறிவிக்கப்பட்டு அவர்களின் கருத்துகளை உள்வாங்கி, திருத்தங்க ளைச் செய்து, அதனைப் பாராளு மன்றத்தில் முன்வைப்பதற்குத் தேவை யான பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

உரிய சட்டத்தின் மூலம் மீனவ மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதோடு, அவர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என உறுதியளிக்கிறோம். வெளிநாட்டுக் கப்பல்கள் மீன்பிடிக்காக இலங்கைக்கு வருவதற்கு இதன்மூலம் வழி ஏற்படும் என்று தெரிவிக்கப்படும் கருத்துகளில் உண்மையில்லை.

மேலும், மீன்பிடித் தொழிலின் வளர்ச்சிக்காக தனியார் துறை முதலீடுகளை எதிர்பார்த்துள்ளோம். மேலும், வெளிநாட்டு முதலீடுகளைப் பயன்படுத்தி மீன்பிடித் துறையை மேம்படுத்துவதே எமது நோக்கமாகும்.

உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் உதவியுடன் மீன்வளர்ப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகிறன. அதிகரித்துவரும் கடல் வெப்பம் மற்றும் சட்டவிரோத மீன்பிடித்தலால், உலகில் மீன் வளம் குறைந்து வருகிறது. தற்போது நாடளாவிய ரீதியில் நீர்வாழ் விலங்குகளின் உணவுக்காக இறால், நண்டு வளர்ப்பு மற்றும் கடற்பாசி வளர்க்கும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார். (ஐ)

## இலங்கை...

மேலும், இலங்கை என்பது அமெரிக்காவின் பிராந்தியமல்ல. எமது நாடு இறையாண்மையுடைய சுயாதீன நாடாகும். எனவே, எமது நாட்டுக்குள் அரசமைப்பு சபையில் நிறைவேற்றப்படும் சட்ட திட்டங்கள் தொடர்பான உரிமை - சட்டத்தை தயாரிக்கும் நிறுவனமான பாராளுமன்றத்துக்கே உரியது.

அதற்கமைய இது தொடர்பான திருத்தங்கள் கடந்த வாரம் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டது. அவை பாராளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவை தொடர்பில் 14 நாட்களுக்குள் நீதிமன்றத்தை நாட முடியும். நீதிமன்றம் அவை தொடர்பில் பரிசீலனை செய்து திருத்தங்களை பரிந்துரைக்கும்.

சமூக வலைதளங்களை கட்டுப்படுத்துவதற்கான எந்தவொரு தேவையும் அரசாங்கத்துக்கு கிடையாது. எவ்வாறிருப்பினும் இனங்கள், மதங்களிடையே ஏற்படும் முரண்பாடுகளை தீர்ப்பதற்கான தேவை அரசாங்கத்துக்கு உள்ளது. தனிநபர் பாதிப்பு உள்ளிட்டவற்றை தவிர்ப்பதே இந்த சட்ட மூலத்தின் நோக்கமாகும்.

எனவே, எந்தவொரு பிரஜைக்கும் சமூக வலைத்தளத்தின் ஊடாக தத்தமது தனிப்பட்ட கருத்துகளை வெளிப்படுத்துவதற்கு எவ்வித தடையும் இல்லை - என்றார்.

நிகழ்நிலை காப்பு சட்ட மூலம் தொடர்பில் கவலை வெளியிடுவதாக அமெரிக்க தூதுவர் ஜூலி சங் ஊடகப் பிரதானிகள், ஊடகவியலாளர் மற்றும் சிவில் சமூக அமைப்பினருடனான சந்திப்பில் தெரிவித்திருந்தார். (ஐ)

## காணாமல்...

ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதி கோரி தொடர் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு 7 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தின் நிறைவில் ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டரக்குக்கு ஆறு கோரிக்கை களை முன்வைத்து மனு ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டது.

## கடந்த...

அரசாங்கம் உருவாக்கவுள்ளது. உண்மை மற்றும் ஐக்கியம் நல்லிணக்கம் ஆணைக்குழு எனப்படும் இந்த புதிய ஆணைக்குழு உண்மையை கண்டறிவதற்காக இலங்கை அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட 36 ஆணைக்குழுக்களின் வரிசையில் இணைந்துகொண்டுள்ளது.

எனினும், நீதியும் பொறுப்புக் கூறலும் இன்னமும் சாத்தியமாகாத விடயங்களாவே காணப்படுவதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

நீதி கோரி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் துணிச்சலுடன் வீதிக்கு இறங்கி இன்றுடன் 8 வருடங்களாகின்றன. இதன் பின்னர் தங்கள் உறவுகளிற்கு என்ன நடந்தது என்பதை அறியாமலேயே 240 முதிய உறவினர்கள் உயிரிழந்தனர்.

இலங்கை அரசாங்கத்தின் உத்தேச நல்லிணக்க ஆணைக்குழுவை நிராகரித்து 37 சிவில்சமூக அமைப்புகளும் 19 சிவில்சமூக செயல்பாட்டாளர்களும் பல அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர். அவர்கள் கடந்தகால ஆணைக்குழுக்களின் தோல்விகளை சுட்டிக்காட்டுகின்றனர். அத்துடன், அவர்கள் வெளியிட்ட ஆவணங்களை அரசாங்கம் பகிரங்கப்படுத்த தவறிய விடயங்கள் - புதிய ஆணைக்குழுவுக்கு போதிய அதிகாரங்கள் இல்லாமை - சர்வதேச சமூகத்தின் பங்களிப்பு இல்லாமை - பொருத்தமான நீதிப்பொறிமுறை இன்மை - கடந்தகால ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த தவறியமை என்பவற்றையும் சுட்டிக்காட்டுகின்றனர் - என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

## இந்திய...

சற்று தூரத்தில் ஆரப்பாட்டத்தில் ஈடுபட்டபோது மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் நீண்டகாலமாக இந்திய மீனவர்களின் அத்துமீறலை கண்டித்து போராடிவருகிறோம். நாம் இனி என்ன தான் செய்வது? ஒருதடவை இந்திய மீனவர்கள் அத்துமீறி வருகின்றபோது எமக்கு ஏற்படும் சேத மதிப்புப் பல இலட்சம் ரூபாய்களை தாண்டுகின்றது.

இதனை ஈடுசெய்ய முடியாத நிலை உள்ளது. இவை தொடர்பில் பல தரப்பட்ட முறைப்பாடுகளை செய்தும் உள்ளோம். எனினும், எந்தப் பயனும் இல்லை. ஒரு நாட்டு மீனவர்கள் தமது நாட்டின் எல்லையை மீறி மற்றொரு நாட்டின் எல்லைக்குள் அத்து மீறி தொழில் செய்கிறார்கள் என்றால், இரண்டு நாட்டு கடற்படைகளும் அனுமதி வழங்குகிறார்களா என்ற சந்தேகம் எமக்கு வருகிறது. எமது வளத்தை பாதுகாக்க வேண்டியவர்களே அதனை அளிக்க நினைப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

அத்துமீறி வருபவர்களுக்கு சரியான தண்டனைகள் வழங்கப்படுமாயின் இந்த அத்துமீறலை தடுக்கலாம். கண்துடைப்புக்காக இந்திய மீனவர்களை கைது செய்வதும் பின்னர் விடுவிப்பதும் ஏமாற்று நாடகமாகவே உள்ளது. இந்திய மீன வர்கள் தொப்புள் கொடி உறவு என கூறிக் கொண்டு எமது வாழ்வாதாரத்தை இல்லாது செய்கிறார்கள். இதனை எவ்வாறு ஏற்பது?

இந்திய மீனவர்களது அத்துமீறல்களை தடுத்து நிறுத்துங்கள் நாங்கள் கடலையே நம்பியுள்ளோம். இலங்கை - இந்திய அரசாங்கங்கள் இரு நாட்டு மீனவர்களையும் மோதவிட்டு பார்க்காது அத்துமீறலை தடுத்து நிறுத்துமாறு கோருகிறோம் - என்று கூறினர். (ஐ)

# மத்திய வங்கி அதிகாரிகளின் சம்பள உயர்வு சட்டவிரோதம்!

## லக்ஷ்மன் கிரியெல்ல

கொழும்பு, பெப். 21

நாட்டை வங்குரோத்து அடையச் செய்த மத்திய வங்கி அதிகாரிகளின் மாத சம்பளம் நூற்றுக்கு 70 வீதத்தால் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. பாராளுமன்றத்துக்கு அறிவிக்காமல் இவ்வாறு மேற்கொண்டிருப்பது சட்டவிரோத செயலாகும் என எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டமூலம், நம்பிக்கை பொறுப்பு பற்றுச்சீட்டுகள்(திருத்தச்) சட்டமூலம் உள்ளிட்ட 9 சட்டமூலங்கள் மீதான இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாடு வங்குரோத்து நிலைக்கு செல்லும்போது இது தொடர்பாக மத்திய வங்கி ஆளுநரோ நிதி அமைச்சின் செயலாளரோ நாட்டுக்கோ பாராளுமன்றத்துக்கோ வெளிப்படுத்தவில்லை.

ஆனால், நாடு வங்குரோத்து அடைவதை வெளிப்படுத்தாமல் மறைத்த மத்திய வங்கி அதிகாரிகளுக்கு நூற்றுக்கு 70 வீத சம்பள அதிகரிப்பு வழங்கி இருக்கிறது. எவ்வாறு இவ்வாறு சம்பளம் அதிகரிக்க முடியும்.

மக்களின் இடுப்புப்பட்டியை இறுக்கிக்கொள்ளுமாறும் பணிமனைகளில் ஆளணியை குறைக்குமாறும் முழு நாட்டுக்கும் ஆலோசனை வழங்கியது இவர்களே. ஆனால், மத்திய வங்கியின் பிரதி ஆளுநரின் சம்பளம் 7இலட்சத்து 12ஆயிரம் ரூபாய் வரை அதிகரித்திருக்கிறது. இது முறையா என கேட்கிறேன்.

இதேபோன்று அலுவலக உதவியாளர்களின் சம்பளத்தை 75ஆயிரம் ரூபாயால் அதிகரித்திருக்கிறது. அவ்வாறு பலரது பெயர் பட்டியல் இருக்கிறது. இவ்வாறு சம்பளம் அதிகரித்துக்கொள்ள அவர்களுக்கு அதிகாரம் இல்லை. அவர்கள் கண்களை மறைத்து செயல்பட்டுள்ளனர்.

அத்துடன் மத்திய வங்கி அதிகாரிகளின் சம்பள அதிகரிப்பை கணக்கிட்டுக் கொள்ள அவர்களுக்கு அதற்கான அதிகாரம் இருக்கிறது. ஆனால், அதற்கு பாராளுமன்றத்தின் அனுமதி பெற வேண்டும். என்றாலும் தற்போது அதிகரிக்கப்பட்டிருக்கும் சம்பள அதிகரிப்புக்கு பாராளுமன்றத்தின் அனுமதி பெறப்படவில்லை.

அதனால் இந்த சம்பள அதிகரிப்பு சட்டவிரோதமாகும். இதனை தடுக்காவிட்டால், எதிர்காலத்தில் நாங்கள் அந்த பணத்தை அவர்களிடமிருந்து மீள பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்போம்.

அத்துடன் நாடு வங்குரோத்து அடைவதை மறைத்த இவர்கள் இந்த பொறுப்பில் இருந்து தப்ப முடியாது. அவ்வாறு இருக்கும்போது எவ்வாறு இவர்களுக்கு சம்பளம் அதிகரிக்க முடியும். அவர்களின் சம்பளம் குறைக்கப்பட்டிருக்க வேண்டும். இன்று அரச சுகாதார துறையினர் கோரும் 35ஆயிரம் ரூபாய் சம்பளத்தை அதிகரிக்க முடியாது என அரசாங்கம் தெரிவிக்கிறது. (ஐ)

## தமிழ் மக்களை...

தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக வரக்கூடியவர்கள் யாரிடத்திலும் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. இதனால், வாக்கு சாவடிக்கு சென்று வாக்காளிக்கும் மனோநிலையில் தமிழ் மக்கள் இல்லை. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி பொது வேட்பாளர் ஒருவரை வருகின்ற ஜனாதிபதித் தேர்தலில் களம் நிறுத்தும் வாய்ப்பு என்ற கருத்து தொடர்பில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நான் இந்த பொது வேட்பாளர் என்ற கருத்துடன் உடன்படவில்லை. தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக வரக்கூடியவர்கள் யாரிடத்திலும் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. இதனால் வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்காளிக்கும் மனோநிலையில் தமிழ் மக்கள் இல்லை.

இவர்கள் (ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி) பொது வேட்பாளர் என்ற விடயம் என்பதை கையில் எடுப்பதே தமிழ் மக்களை வாக்குச் சாவடியை நோக்கி வரவைப்பதற்குத்தான். தமிழ் மக்களின் வாக்குகள் இந்த சிங்கள தரப்புகளுக்கு போகக்கூடாது என்பது தான் தமிழ் மக்களிடத்தில் மேலோங்கி நிற்கும் பார்வை.

இப்படியான தமிழ் மக்களின் அதிருப்தியை வெளிக்காட்டுகின்ற வகையிலான தந்திரோபாய நகர்வை கையாளாமல் ஜனநாயக ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவது என்றும் தமிழ் மக்கள் பொது வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும் என்றும் விரும்பினால் இரண்டாவது வாக்கைத் தமக்கு பிடித்த வேட்பாளருக்கு வழங்கலாம் என்றும் கூறுகின்றது. இது நேரடியாக சிங்களத் தரப்புக்கு வாக்களிக்குமாறு கூறுவதற்கு சமன். இவர்களுடைய நோக்கமே இப்படி ஒரு பொது வேட்பாளர் என்ற விடயத்துக்கூடாக தமிழ் மக்களை வாக்குச் சாவடிகளுக்கு வர வைப்பது தான். இவர்கள் எவரும் பேரம் பேசும் சக்திகளாக ஒருபோதும் இருக்கப் போவதில்லை.

விக்னேஸ்வரன் கூறிவிட்டார் இந்த சூழ்நிலைக்கு பொருத்தமானவர் ரணில் தான் என்று. ஆகவே, அவரின் தெரிவு ரணில். தமிழ் அரசுக் கட்சி தாங்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களில் தமிழ் மக்களுடன் சாதகமான ரீதியில் பயணிக்கக்கூடிய ஒருவரைதான் தெரிவு செய்வோம் என்று கூறிவிட்டது. எங்களைப் பொறுத்த வரையில் எங்கள் வாக்குகளின் பெறுமதியை வெல்கின்ற தரப்புக்கும் - தோற்கின்ற தரப்பக்கும் மற்றும் உலகுக்கும் காட்டவேண்டும் - என்றார். (ஐ)

## விவசாயத்...

பங்களிப்பை ஆற்றியது. நாட்டை விரைவாக மீளக் கட்டியெழுப்பக்கூடிய இரண்டு பிரதான துறைகளாக விவசாயம் மற்றும் சுற்றுலாத்துறை என்பன அடையாளம் காணப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமான ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்திய மாநாட்டின் 37 ஆவது அமர்வின் ஆரம்ப அமர்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் அங்கம் வகிக்கும் 46 நாடுகளில் அமெரிக்கா, சீனா, ரஷ்யா உள்ளிட்ட 34 நாடுகளின் இராஜதந்திரிகள் மற்றும் பிரதிநிதிகளின் பங்குபற்றலுடன் ஆரம்பமான மாநாடு இன்று நிறைவடைகிறது - என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# தமிழ் அரசுக்கு எதிரான வழக்குகளில் சுமந்திரன் முன்னிலையாக முடியாது!

## தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளும் விளையாட்டு என்கிறார் சட்டத்தரணி கே.வி.தவராசா

யாழ்ப்பாணம், பெப். 21

**தமிழ் அரசு கட்சிக்கு எதிராக யாழப்பாணம், திருகோணமலையில் தொடரப்பட்டுள்ள வழக்குகளில், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையாக முடியாது என சுட்டிக் காட்டியுள்ளார் இலங்கை தமிழ் அரசு கட்சியின் கொழும்பு கிளைத் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி.தவராசா.**

அவர் கருத்து தெரிவிக்கையில்-

இலங்கை தமிழரசு கட்சியின் பொதுக்குழு எடுத்திருந்த தீர்மானங்களுக்கு எதிராகவும் தேசிய பேராளர் மாநாட்டுக்கு எதிராகவும் திருகோணமலையிலும் யாழ்ப்பாணத்திலும் பெறப்பட்டுள்ள இடைக்கால நீதிமன்ற கட்டாணைகள் தொடர்பாக ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் 16.01.2024 ஊடகங்களுக்கு அறிக்கையொன்றை வெளியிட்டு இருந்தார். அவ் அறிக்கையில் கட்சியின் தலைவர்களும் வழக்கின் எதிராளியாக பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் தனது சகாக்களும் கேட்டுக் கொண்டால் கட்சிக்காக அவர் முன்னிலை ஆவதற்கும் தயாராக இருப்பதாக குறிப்பிட்டு இருந்தார்

சட்டத்தின் பார்வையில் இந்தச் செய்தி சட்ட நுணுக்கமற்ற சிறுபிள்ளைத்தனமானது என்பது சட்டம் தெரிந்த யாவருக்கும் இலகுவாக புரியும்.

யாழ்ப்பாணத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில், பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனால் தமிழரசு கட்சிக்கு புதிதாக தேர்வான தலைவர் சிவஞானம் சிறிதரனுக்கு 31.01.2024 எழுதப்பட்ட கடிதம் ஊடகங்களில் பிரசுரமாகி இருந்தது. வழக்காளியான பீட்டர் இளஞ்செழியன் தாக்கல் செய்த இவ் வழக்கில் ‘T4’ என்று அடையாமிடப்பட்டு அந்தக் கடிதம் ஆவணமாக இணைக்கப்பட்டுள்ளது. எனவே அந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படும் வேளையில் சுமந்திரன் நீதிமன்றத்திற்கு ஒரு சாட்சியாக அழைக்கப்பட முடியும். வழக்கிற்கு சாட்சியாக அழைக்கப்படும் எவரேனும் அந்த வழக்கில் மற்றைய எதிராளிக்காக முன்னிலையாவது நடைமுறையில் சாத்தியமற்ற விடயமாகும் . ஏனெனில் ஒரு வழக்கில் சாட்சியாக குறிப்பிடப்பட்டுள்ள ஒருவர் அதே வழக்கில் சாட்சியமளிக்க மட்டுமே முடியும்.

அத்தோடு திருகோணமலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் 6ம் எதிராளியாக சுமந்திரன் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார். எனவே எதிராளி தனக்குத் தானே வாதாட முடியுமே தவிர கட்சிக்காகவோ அல்லது அதில் குறிப்பிடப்பட்டுள்ள பிற எதிராளிகளுக்காகவேர் எக்காரணம் கொண்டும் வாதாடுவதில்லை. அவர் தன்னை காத்துக் கொள்ள தனக்காக மட்டுமே வாதாட முடியும். மேலும் தனக்காக வாதாடுபவர்கள் சாட்சியம் அளிக்கும் சூழ்நிலையும் உருவாகலாம்.

ஒரு நடைமுறை சாத்தியமற்ற விடயத்தை எந்த நீதிமன்றமும் அனுமதிப்பதும் இல்லை கடைப்பிடிக்கப்படுவதுமில்லை . சட்டத்தின் அடிப்படைகள் மேலோட்டமாக தெரிந்த ஒருவருக்கு கூட இலகுவாக புரிந்து கொள்ளக்கூடிய இந்த விடயத்தை ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் பிரதான விடயத்தை திசை திருப்புவதற்காக மாத்திரம் விடுக்கப்பட்ட ஒன்றாக மட்டுமே என்னால் அவதானிக்க முடிகின்றது. தமிழ் அரசுக்கட்சியை பாதுகாப்பேன் என்பது பிள்ளையையும் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டுவிக்கும் செயல்பாடாகும் - என்றார். (அ)

# நீரை சிக்கனமாக பயன்படுத்துங்கள்!

கொழும்பு, பெப். 21

நிலவும் வரட்சியான வானிலை காரணமாக நீர் மட்டம் குறைவடைந்துள்ளமையால் களனி ஆற்றின் குறுக்கே உப்புத் தடுப்புச்சுவரை அமைக்கும் திட்டத்தை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

அதன்படி, தடுப்புச்சுவர் அமைக்கும் ஆரம்பகட்ட பணிகள் இடம்பெற்று வருவதாக பிரதி பொது முகாமையாளர் பொறியியலாளர் அனோஜா களுஆராச்சி தெரிவித்துள்ளார்.

அத்தோடு, தற்போதுள்ள நீர் கொள்ளளவை பயன்படுத்தி நீர் விநியோகம் தொடர்ந்து நடைபெறும்.

நாட்டில் வரட்சியான வானிலை நீடித்து வருவதோடு, நீரின் நுகர்வு அதிகரித்துள்ளது.

எனவே, பொதுமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)

# நிறைவேற்றதிகாரத்தை நீக்கும் முயற்சிக்கு நாமல் கடும் எதிர்ப்பு



கொழும்பு, பெப். 21

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கும் நோக்கில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு முயற்சி எடுக்கப்படுமானால் அது ஏற்புடைய நடவடிக்கை அல்ல. அந்த முயற்சி வெற்றியும் அளிக்காது என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையும், தேர்தல் முறைமையும் பின்னிப்பிணைந்துள்ளன. இவை இரண்டும் மாற்றப்படுமானால் அது பற்றிப் பரிசீலிக்கலாம்.

ஆனால் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கும் நோக்கில் இதற்கான ஏற்பாடு இடம்பெறுமானால் அது நீதியான நடவடிக்கை அல்ல.

அந்த நடவடிக்கை வெற்றியும் அளிக்காது. தற்போதைய சூழ்நிலையில் மக்களுக்குப் பல பிரச்சினைகள் உள்ளன. அவற்றை மூடிமறைப்பதற்குகூட நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை பற்றிப் பேசப்படலாம்.

மக்களின் பிரச்னைகளுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் - என்றார். (அ)

# காணாமல்போனவர்களின் உறவுகளுக்கு பணம் வழங்கிப் பேரம் பேசுகின்றது அரசு

## கிளிநொச்சியில் ஜீவந்த பீரிஸ் சாடல்

கிளிநொச்சி, பெப். 21

காணாமல்போனவர்களின் உறவுகளுக்கு பணம் கொடுத்து அவர்களுடன் பேரம்பேசும் அநியாயமான மக்கள் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என அரகலய போராட்டக்காரர்களில் ஒருவரான அருட் தந்தை ஜீவந்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற காணாமல் போன உறவுகளின் போராட்டத்தில் கலந்துகொண்ட வேளை அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்கள் பேரவைக்கான



இயக்கமாக இன்று கிளிநொச்சியில் ஒன்றுகூடி காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு ஆதரவளிக்கின்றோம். ஏழு வருடங்களாக வடக்கின் தாய்மார்கள் தமது பிள்ளைகளுக்காகவும் குடும்பத்திற்காகவும் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

ரணில் ராஜபக்ஷவின் மக்கள் விரோத அரசாங்கம் காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு பணம் கொடுத்து வடக்கில் பாதிக்கப்பட்ட மக்களை மேலும் மிதிக்கும் - பேரங்களை செய்யும் அநியாய வேலைத்திட்டத்தை செய்து வருகின்றது. நாங்கள் மக்கள் பேரவைக் கான இயக்கமாகவும் மக்களாகவும் வடக்கிலும் தெற்கிலும் ஒன்றுபடுவது இன்றியமையாதது - என்றார். (அ)

# அமைச்சுப் பதவிகள் தொடர்பில் ஆளுங்கட்சிக்குள் கடும் போட்டி

கொழும்பு, பெப். 21

பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னர் அமைச்சு பதவியொன்றை பெற்று விட வேண்டும் என்பதில் ஆளுங்கட்சிக்குள் பெரும் போட்டி ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாத இறுதிக்குள் தற்போதையை அமைச்சரவையை மாற்றி புதியவர்கள் சிலரை உள்வாங்குவது குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசித்துக் கொண்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் குறித்த அமைச்சரவை மாற்றத்தின் போது தாமும் அமைச்சு பதவியொன்றை பெற்றுவிட வேண்டும் என்பதில் ஆளுங்கட்சியின் மூத்த அரசியல்வாதிகள் மட்டுமன்றி, முதல் தடவையாக பாராளுமன்றத்துக்கு தெரிவான சிலரும் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக அறியக் கிடைத்துள்ளது.

எனினும் தற்போதைய நிலையில் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படும் வஜிர அபேவர்த்தன, பௌசி ஆகியோருக்கு மட்டுமே அமைச்சுப் பதவிகள் குறித்த வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அமைச்சு பதவியொன்றை ஏற்பது தொடர்பில் பௌசி இதுவரை எதுவித தீர்மானங்களையும் தெரிவிக்கவில்லை என்றும் தெரியவந்துள்ளது. (அ)

# சுற்றாடல் இராஜாங்க அமைச்சராக ஜானக வக்கும்புர நேற்று நியமனம்!

கொழும்பு, பெப். 21

சுற்றாடல் இராஜாங்க அமைச்சராக ஜானக வக்கும்புர நேற்று செவ்வாய்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

அவர் ஏற்கனவே மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சராக பதவி வகித்து வரும் நிலையில் அதற்கு மேலதிகமாக தற்போது சுற்றாடல் இராஜாங்க அமைச்சு பதவி வழங்கப்பட்டுள்ளது.

முன்னதாக குறித்த அமைச்சு பதவியை கெஹலிய ரம்புகவெல்ல வகித்திருந்த நிலையில் அந்த பதவி தற்போது ஜனக வக்கும்புரவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

தரமற்ற மருந்து இறக்குமதி தொடர்பான குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டதை அடுத்து கெஹலிய ரம்புகவெல குறித்த இராஜாங்க அமைச்சு பதவியை இராஜினாமா செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தொடர்ந்தும் வாகனங்கள் இறக்குமதி செய்யப்படும்!

## நிதி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, பெப். 21

வாகன இறக்குமதி தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

”வாகன இறக்குமதிகளை எவ்வாறு கட்டுப்படுத்துவது மற்றும் எங்களுக்கு எத்தனை வாகனங்கள் தேவை என்பதை தீர்மானிக்க நாங்கள் ஒரு குழுவை நியமித்துள்ளோம்.

”இலங்கை அண்மைக் காலத்தில் 29 வாகனங்களை மட்டுமே இறக்குமதி செய்துள்ளது, சுகாதார அமைச்சுக்கு 21 வாகனங்ள் மற்றும் சிறீ லங்கன் எயார்லைன்ஸுக்கான மூன்று சொகுசு பேருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன - என்றும் கூறினார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.02.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# உக்ரைனில் முக்கிய நகரை கைப்பற்றியது ரஷ்யா: போரின் போக்கு ரஷ்யாவுக்கு சாதகமாக மாறுகிறதா?

ஜரோஸ்லாவ் லுகீயவ்

ரஷ்ய - உக்ரைன் போரின் ஒரு பகுதியாக நான்கு மாதங்களாக அவ்திவ்கா பகுதியில் நடைபெற்ற மோதலுக்கு பிறகு அந்த பகுதியில் இருந்து பின் வாங்கியுள்ளது உக்ரேன் படை.

“மக்களின் உயிரை காப்பாற்றவும், சுற்றி வளைக்கப்படுவதை தவிர்க்கவும், அவ்திவ்காவிலிருந்து எனது படைகளை பின்வாங்குகிறேன்” என்று அறிவித்துள்ளார் ஒலெக்சாண்டர் சிர்ஸ்கி.

இந்த மாதம் உக்ரேன் ராணுவத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஜெனரல் ஒலெக்சாண்டர் சிர்ஸ்கி “ மக்களின் உயிரை பணயம் வைப்பதற்கு பதிலாக நான் பின்வாங்குவேன்” என்று கூறியிருந்தார். அதைத்தான் கிழக்கு உக்ரேனிலும் அவர் பின்பற்றினார்.



இந்த போரில் ரஷ்யாவும் அதிக இழப்புகளை சந்தித்துள்ள போதிலும், நான்கு மாதங்களாக தொடர்ந்து நடைபெற்று வரும் போரால் உக்ரேனிய வீரர்கள், ஆயுதம் மற்றும் வெடிமருந்துகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

கடந்த ஆண்டு உக்ரேனின் எதிர் தாக்குதல் தோல்விக்கு பிறகு, இந்த போரில் ரஷ்யாவுக்கு கிடைத்துள்ள பெரிய வெற்றி இது.

அவ்திவ்கா 2014 ஆம் ஆண்டு ரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்டது. ஆனால் உக்ரைன் அதை மீண்டும் கைப்பற்றிக் கொண்டது.

எனவே, இந்த நீண்ட மோதலில் அவ்திவ்காவின் வீழ்ச்சி எதை உணர்த்துகிறது?

**மாபெரும் சக்தி கொண்ட நாட்டுடன் நீளும் போராட்டம்**

ரஷ்யா மற்றும் உக்ரேன் இடையிலான போர் நீண்டுகொண்டே இருக்கும் நிலையில், இரு நாடுகளுக்கும் உள்ள வலிமையின் வேற்றுமை வெளிப்படையாகவே தெரிய தொடங்கியுள்ளது.

ரஷ்யாவின் மக்கள் தொகை 144 மில்லியன் ஆகும். இது உக்ரேனிய மக்கள்தொகையை விட நான்கு மடங்கு அதிகம்.

இந்த போரில் ரஷ்யா ஆயிரக்கணக்கான வீரர்களை இழந்துள்ள போதிலும், புதிய வீரர்களை களத்துக்கு கொண்டு வருவதன் மூலம் தனது பலத்தை காட்டியுள்ளது.

உக்ரேனிய ராணுவம் இழப்புகளை சந்தித்துள்ள போதிலும், அது ரஷ்ய இழப்பை விட குறைவே ஆகும்.

உக்ரேனின் முன்பகுதியில் அமைந்துள்ள நகரங்களில் நடந்தது போலவே, முழுமையாக அழிக்கப்பட்ட இந்த நகரத்தை கைப்பற்றியுள்ளது ரஷ்யா.

இங்கு நிறுத்தப்பட்டிருந்த உக்ரேனின் 3வது தாக்குதல் படைப்பிரிவு, தாங்கள் அனைத்து திசைகளில் இருந்தும் எதிர்ப்படையினரால் தாக்கப்பட்டதாக தெரிவித்துள்ளனர்.

ரஷ்யா தனது நன்கு பயிற்சியளிக்கப்பட்ட படைகளை அங்கு நிறுத்தியிருப்பதாகவும், உக்ரேனிய ராணுவ இலக்குகள் மீது நாளொன்றுக்கு 60 குண்டுகள் வரை வீசியதாகவும் நம்பப்படுகிறது.

கடந்த முறை உக்ரேனிய நகரமான பாக்முத் நகரை ரஷ்யா கைப்பற்றிய போது, ஜெனரல் சிர்ஸ்கி விமர்சிக்கப்பட்டார். காரணம் அங்கு நீண்டகாலம் பதவியில் இருந்தவர் அவரே. மேலும், தேவையில்லாத இழப்புகளை ஏற்படுத்தி குறிப்பிடத்தகுந்த வெற்றியைப் பெற அவர் முயற்சிப்பதாகவும் குற்றம் சாட்டப்பட்டது.

அந்த அனுபவம் அவரது அணுகுமுறையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது போல தெரிகிறது.

**போர் ரஷ்யா பக்கம் சாய்கிறதா?**

தற்போதைய ரஷ்யாவின் முன்னேற்றம் ஒன்றும் ஒரே இரவில் நடக்கவில்லை. கடந்த ஆண்டு அக்டோபரில் இருந்து, அவ்திவ்காவின் மீது தொடர் தாக்குதல்களை நடத்தி வருகிறது ரஷ்யா.

இந்த தொழில் நகரத்தின் வலுவான தளங்கள் மற்றும் பாதுகாப்பின் மூலம் உக்ரேனிய வீரர்கள் அங்கிருந்தவாறே ரஷ்யா மீது குறிப்பிட்ட தாக்குதல்களை நடத்தி அவர்களுக்கு சேதத்தை ஏற்படுத்தி வந்தனர். இதனால் இந்த நகரமே ரஷ்ய வீரர்களின் சடலமயமாக மாறிப் போனது. ரஷ்யாவின் கவச வாகனத்தையும் அவர்கள் அழித்துவிட்டனர்.

ஆனால், ரஷ்யாவின் முதல் தாக்குதலுக்கு பிறகு கடந்த பத்தாண்டுகளாக பலப்படுத்தப்பட்டு வந்த இந்த பாதுகாப்பு தளத்திற்குள் தற்போது ரஷ்யா முன்னேறி வந்துவிட்டது.

ஆனால் ரஷ்யா மிக சமீபத்தில் உருவாக்கிய எந்த தளத்திற்குள்ளும் ஊடுருவ முடியாமல் இருப்பது உக்ரேனுக்கு ஒரு பின்னடைவே.

“ரஷ்யாவால் தந்திரத்தின் மூலம் மட்டுமே இலக்குகளை அடைய முடியும், ஆனால் உத்தியைக் கொண்டு அடைய முடியாது” என்கிறார் உக்ரேனிய இராணுவத்தின் 3வது தாக்குதல் படைப்பிரிவின் துணைத் தளபதி மேஜர் ரோடியன் குத்ரியாஷோவ்,

போன் வழியாக பேசிய அவர், “எங்களது வீரர்கள் ஏழுக்கு-ஒன்று என்ற கணக்கில் குறைவாக இருக்கின்றனர். இது ஏதோ நாங்கள் இரண்டு எதிரிகளுடன் சண்டையிடுவது போல் இருக்கிறது” என்று கூறுகிறார்.

அவர்கள் போக்ரோவ்ஸ்க் மற்றும் கோஸ்ட்யான்ட்னிவ்கா உள்ளிட்ட நகரங்களுக்குள் ரஷ்யர்களால் நுழைய முடியாது என்ற நம்பிக்கையில் இருக்கின்றனர். ஆனால், அதற்கு உத்தரவாதம் எதுவும் கிடையாது.

ரஷ்யா அவ்திவ்காவை கைப்பற்றியது, கிழக்கில் 15 கிலோமீட்டர் தொலைவில் உள்ள டொனெட்ஸ்க்



நகரத்தின் மீதான அவர்களின் அழுத்தத்தை குறைக்கும். இந்த நகரத்தை 2014 இல் ரஷ்யா கைப்பற்றியிருந்தது.

**ரஷ்ய - உக்ரேன் போரின் தற்போதைய நிலை என்ன?**

உக்ரைன் பின்வாங்குவது இது ஒன்றும் முதல் முறையல்ல.

குறிப்பாக 2022 கோடைகாலத்தில் நவீன ஆயுதங்களோடு கூடிய பெரிய எண்ணிக்கையிலான ரஷ்ய படை, லிசிசான்ஸ்க் மற்றும் செவெரோடோனெட்ஸ்க் பகுதிகளை சுற்றிவளைத்தது.

அந்த சமயத்தில் உக்ரேனால் எதுவுமே செய்ய முடியவில்லை.

இருப்பினும் மேற்கத்திய ஆயுதங்கள் மற்றும் தனது ராணுவத்தின் மூலம் விரைவிலேயே நிலைமையை மாற்றியது. அதே ஆண்டில் கெர்சன் மற்றும் கார்கிவ் பகுதிகளை ரஷ்யாவிடம் இருந்து விடுவித்தது உக்ரேனிய ராணுவம். ஆனால், தற்போது இந்த போர் வேறு நிலையை அடைந்துள்ளது. இந்த போர்க்களத்தின் மீது உலக அரசியல் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேற்கத்திய நாடுகள் வழங்கும் உதவியில் ஏற்பட்டுள்ள பின்னடைவே, தற்போது அவ்திவ்கா பின்வாங்கலுக்கு நேரடி காரணம் என்று கருதப்படுகிறது.


உக்ரேனுக்கு ஆயுதம் வழங்குவதில் அமெரிக்கா முதன்மையானதாக இருக்கிறது. அதற்கு காரணம் அதனால் மட்டுமே, வேகமாக அதிக அளவிலான ஆயுதங்களை வழங்க முடியும். உக்ரேனுக்கு வழங்குவதற்கான 95 பில்லியன் அமெரிக்க டாலர் உதவிகளை அமெரிக்கா இன்னமும் வழங்கவில்லை. மற்ற நட்பு நாடுகளும் இந்த இடைவெளியை நிரப்ப போராடி வருகின்றன.

எனவே உக்ரேன் தனது ஆயுதங்களை கவனமாக பயன்படுத்த வேண்டும். மேலும் அவர்களது தன்னம்பிக்கையும் குறைந்து விட்டது.

ஆனால் உக்ரேன் எதிர்பார்த்தபடி, அவ்திவ்கா மட்டுமே பின்வாங்கும் இடமாக இருக்காது.

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுக்கு ஒட்டுமொத்த உக்ரேனும் தேவைப்படுகிறது. அதை அவர் பெறுவதற்கும் வாய்ப்புள்ளது.

இந்த வாய்ப்பு மேற்கத்திய ஒற்றுமையின் மூலம் தகர்ந்தும் போகலாம் அல்லது அசாதாரண திறமையை கொண்டுள்ள போதிலும் உக்ரேன் இந்த போரில் வெற்றி பெறாது என்ற சந்தேகத்தையும் வலுப்படுத்தலாம் என்பதே தற்போதைய ரஷ்ய - உக்ரேன் போரின் நிலை.





# குட்டி யானைகளை பலி கொள்ளும் ‘அவுட்டுக்காய்’: 10 ஆண்டுகளில் 587 யானைகள் உயிரிழப்பு!

சுனேத் பெரேரா

ஒரு ருசியான மிகவும் இனிப்பான ஒரு பொருளை கடிப்பதை கற்பனை செய்து கொள்ளுங்கள். ஆனால், அதைக் கடித்த பின், உங்களின் கீழ் தாடை வெடித்து, அதிக வலி ஏற்படுகிறது.

நீங்கள் வேதனையுடன் விலகிச் செல்லலாம். ஆனால், காயங்கள் ஆறாமல், அவை தொற்றுநோயாகும். பின், சாப்பிடவோ தண்ணீர் குடிக்கவோ முடியாமல், நீங்கள் பட்டினியால் வாடலாம்.

துரதிர்ஷ்டவசமாக, இலங்கையில் குட்டி யானைகளின் மரணத்திற்கு இந்த அவுட்டுக்காயே அதிக காரணம்.

‘ஹக்கா பட்டாஸ்’ அல்லது தாடை பட்டாசுகள் என்றும் அழைக்கப்படும் இந்த வகை அவுட்டுக்காய், காட்டுப் பன்றிகளை உடனடியாக வேட்டையாடுவதற்காக வேட்டையாடுபவர்களால் பயன்படுத்தப்படும் ஒன்றாகும்.

சில விவசாயிகள் பயிர்களை அழிக்கும் பன்றிகள் உள்ளிட்டவற்றை கொல்லவும் அவற்றைப் பயன்படுத்துகின்றனர்.

ஆனால், யானைகள் பொதுவாக இந்த கொடிய காயால் பலியாகின்றன. இவை கடித்தால், வெடிக்கும். இந்தக் காய் மிகவும் வேதனையான மரணத்திற்கு வழிவகுக்கிறது.

யானைகள் காட்டுப்பன்றிகளை விட பெரியதாக இருப்பதால், அவை வெடித்தபின் வாயில் காயங்களுடன் வலியுடன், பட்டினியால் இறக்கும் வரை பல நாட்கள் நடக்கின்றன,

நிபுணர்களின் கூற்றுப்படி, இளம் யானைகள் இந்த வகை அவுட்டுக்காயால் பாதிக்கப்படலாம் என்று தெரிகிறது.

2023 ஆம் ஆண்டில், வீட்டில் தயாரிக்கப்பட்ட கருவியால் கொல்லப்பட்ட யானையின் வயது 10 மாதம்.

“மனிதக் குழந்தைகளைப் போலவே, ஆர்வத்தின் காரணமாக, குட்டி யானைகள் எதைக் கண்டாலும் கடிக்கின்றன. வாயில் பொருட்களை வைக்கும்போது அவை தொடுதல் மற்றும் சுவை உணர்வுகளை ஆராய்கின்றன,” என்றார் கால்நடை அறுவை சிகிச்சை நிபுணர் அகலங்கா பினிடியா. இவர் இலங்கை வனவிலங்கு கால்நடை மருத்துவ சங்கத்தின் தலைவர்.

“மருத்துவ அறிக்கைகள் மற்றும் தரவுகளைப் பார்க்கும்போது, குட்டி யானை முதல் பெரிய யானை வரை தாடை குண்டுகளால் கொல்லப்பட்டதைக் காணலாம். இருப்பினும், பாதிக்கப்பட்ட யானைகளில் பெரும்பாலானவை இரண்டு முதல் பத்து வயதுடைய இளம் யானைகள்,” என அவர் கூறினார்.

இலங்கையில் 2023 ஆம் ஆண்டின் தரவுகளின்படி, இதுவரை இல்லாத அளவில் யானைகளின் இறப்பு பதிவு செய்யப்பட்டிருந்தது. அதில், 470க்கும் மேற்பட்ட யானைகள் கொல்லப்பட்டிருந்தன.



**அவுட்டுக்காயை எப்படித் தயாரிக்கிறார்கள்?**

சமன் குமார (பெயர் மாற்றப்பட்டுள்ளது) வட இலங்கையில் உள்ள ஒரு தொலைதூர கிராமத்தில் தாடை வெடி குண்டுகளை தயாரிக்கும் பலரில் ஒருவர்.

எளிதாகத் தயாரிக்கக் கூடியவை என்பதால், தன்னைப் போன்ற வேட்டைக்காரர்கள் அந்த பொருளை நாடுவதாக அவர் கூறினார்.

“நாங்கள் உள்ளூர் கடைகளில் இருந்து பட்டாசுகளை வாங்குகிறோம். பின்னர் நாங்கள் அவற்றில் இருந்து வெடி மருந்தை எடுத்து, அவற்றை சரளை மற்றும் உலோக குப்பைகளுடன் கலக்கிறோம்,” என்றார் அவர்.

“நாங்கள் அவற்றை உருண்டைகளாக வடிவமைத்து பிளாஸ்டிக் பைகளில் கட்டி, பின்னர் காட்டுப்பன்றிகளை ஈர்ப்பதற்காக சர்க்கரை பனை பழங்கள், பூசணிக்காய்கள் அல்லது அழுகிய மீன்களைக் கொண்டு மூடுகி றோம்,”என்றார்.

யானைகள் மீன்களை உண்ணாவிட்டாலும், சில பழங்கள் போன்ற தூண்டிலில் அவை சிக்கிக்கொள்வதாக குமார கூறினார்.

ஆனால், குட்டி யானைகளுக்கு தீங்கு விளைவிப்பது தனது நோக்கமல்ல என்றும் குமார விளக்கினார்.

“குழந்தைகள் எல்லாம் ஒன்றுதான். குட்டி காட்டுப்பன்றிகளாக இருந்தாலும் சரி, யானைக் குட்டிகளாக இருந்தாலும் சரி, அவை வாயில் பொருட்களை வைக்கும். அது அவர்களின் இயல்பு. அதற்கு நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது,” என்றார் அவர்.

பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகளில் வேட்டையாடுவது தண்டனைக்குரிய குற்றமாக இருந்தாலும், வேட்டையாடுபவர்கள் வேட்டையாடுவதை நிறுத்துவதில்லை என்றார் குமார.

“அவர்கள் கைது செய்யப்படுவதைத் தவிர்க்க எளிதான வழிகளை மட்டுமே கண்டுபிடிக்கிறார்கள். தாடை வெடி குண்டுகளைத் தயாரிக்கத் தெரிந்தால், நீங்கள் துப்பாக்கியை எடுத்துச் செல்ல வேண்டியதில்லை. ஒரு சில பட்டாசுகள் மற்றும் ஜல்லிகள் போதும்,” என்றார் அவர்.



இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் உணவுப் பொருட்களின் அதிக விலை காரணமாக, கிராமப் புறங்களில் இருந்து அதிக எண்ணிக்கையிலான மக்கள் வனவிலங்கு மாமிசம் சாப்பிட வருகிறார்கள். இது தாடை குண்டுகளின் பயன்பாடு அதிகரிப்பதற்கு வழிவகுக்கும் என்றும் குமார நம்புகிறார்.

**அவுட்டுக்காயால் பலியாகும் யானைக்குட்டிகள்**

இலங்கையில் வனவிலங்கு பாதுகாப்பு துறை வெளியிட்டுள்ள புள்ளி விபரங்களின்படி, கடந்த தசாப்தத்தில் தாடை குண்டுகளால் யானைகள் இறந்தது தான் அதிகம்.

2013 முதல் அக்டோபர் 2023 வரை, இந்த அவுட்டுக்காய் அல்லது தாடை குண்டுகளால், 587 யானைகள் கொல்லப்பட்டுள்ளன. இது துப்பாக்கிச் சூட்டில் இறந்த யானைகளின் இறப்பை விட அதிகம். இதே காலக்கட்டத்தில், 575 யானைகள் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளன.

தாடை குண்டுகளால் காயமடைந்த யானைகளில் 99 வீத யானைகளுக்கு சிகிச்சை அளித்தாலும் காப்பாற்ற முடியாது என்று வனவிலங்கு கால்நடை மருத்துவர் பினிடியா கூறுகிறார்.

“யானை வாயில் வைத்து கடித்தால், சில நேரங்களில் ஒரு துண்டு அல்லது முழு நாக்கும் உடைந்து விடும். அது தவிர, தாடை, பற்கள் மற்றும் மென்மையான பகுதிகளும் சிதைந்துவிடும்,” என்றார் அவர்.

“தாடை உடைந்தால், யானைகளால் சாப்பிட முடியாது. மேலும், வாயின் தசைகள் சேதமடைந்தால், தாடை வேலை செய்யாது. நீங்கள் மெல்ல முடியாது. வாய் எப்போதும் திறந்திருக்கும். நாக்கு உடைந்தால், உணவு அல்லது தண்ணீரை உள்ளே தள்ள முடியாது.”

“துன்பத்தின் காலம் என்பது காயத்தின் அளவு, விலங்கின் வயது மற்றும் அதன் சகிப்புத்தன்மையைப் பொறுத்தது. சில விலங்குகள் இரண்டு வாரங்கள் வரை அவதிப்படுகின்றன,” என்றார் அவர்.

**மனிதன் - யானை மோதல்**

இலங்கையில் உள்ள யானை, இந்தத் தீவை பூர்வீகமாகக் கொண்டது. ஆசிய யானைகளில் இந்த துணை இனம் மிகப்பெரியது.

இலங்கையில் கடைசியாக, 2011 ஆம் ஆண்டு காட்டு யானைகளின் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதன்படி, இலங்கையில், 5,879 யானைகள் உள்ளதாக தெரியவந்தது.

இந்த யானைகள், இலங்கை மக்களின் இதயத்தில் சிறப்பான இடத்தை பிடித்துள்ளனர். இந்த யானைகள், அந்த நாட்டின் வரலாறு, கலாசாரம் மற்றும் இலக்கியத்தில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளனர்.

ஆனால், காடுகளை அழிப்பதாலும், நாட்டில் நடந்த வரும் வளர்ச்சித் திட்டங்களாலும், மனிதன்-யானை மோதல் சமீப காலமாக அதிகரித்து வருகிறது.

“இலங்கையில் ஒரு யானை பேரழிவு நடக்கிறது,” என்று இலங்கையில் விலங்குகளை பாதுகாக்கும் அமைப்பானார் (RARE) நிறுவனர் பாஞ்சாலி பனாபிட்டிய கூறினார். (16ஆம் பக்கம் பார்க்க)



# குட்டி யானைகளை...

“இலங்கையில் யானைகள் மட்டுமல்ல, ஒவ்வொரு நாளும் ஒரு மனிதர் இறந்து கொண்டே இருக்கிறான். இரவில் யானைகளால் வீடுகள் உடைக்கப்படும் என்ற அச்சத்தில் கிராம மக்கள் எப்போதும் தூங்குவதில்லை,” என்று அவர் கூறினார்.

“வன விலங்கு சுற்றுலா மூலம் இலங்கைக்கு வெளிநாட்டு வருவாயை ஈட்டுவதில் யானை முதன்மையான பங்களிப்பாகும். இருப்பினும், மனிதன்-யானை மோதலால் பாதிக்கப்பட்ட சமூகங்கள் இதை புரிந்து கொள்ளவில்லை, ஏனெனில் இந்த சமூகங்களுக்கு சரியான வருமானம் இல்லை,” என்றார் அவர்.

இலங்கையில் தாடை குண்டுகள் சட்டவிரோதமானது என்றாலும், அதிகாரிகள் சட்டத்தை அமல்படுத்தவோ அல்லது உற்பத்தியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கவோ முன் வருவதில்லை என்றார் பனாபிட்டிய. ஆனால், இதனை வனவிலங்கு அதிகாரிகள் மறுக்கின்றனர்.

தாடை வெடிகுண்டுகளின் பயன்பாட்டைக் குறைக்க கிராமப்புறங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருவதாக அவர்கள் கூறுகிறார்கள்.

“யானையைக் கொல்வது இலங்கைச் சட்டத்தின்படி குற்றமாகும். குற்றம் நிரூபிக்கப்பட்ட ஒருவருக்கு பத்து ஆண்டுகள் சிறைத்தண்டனையும் ரூ 10 லட்சம் வரை அபராதமும் விதிக்கப்படலாம்” என்று இலங்கை வனத்துறை அதிகாரி ஹாசினி சரத்சந்திர தெரிவித்தார்.

“தற்போது, தாடை வெடிகுண்டுகளைப் பயன்படுத்துவது தொடர்பான பல வழக்குகள் விசாரணையில் உள்ளன, மேலும் நீதிமன்றம் ஏற்கனவே பலரை தண்டித்துள்ளது,” என்றும் அவர் கூறினார்.





தாடை வெடிகுண்டுகளை தயாரிப் பதில் அல்லது அவற்றைக் கொண்டு விலங்குகளை வேட்டையாடுவதில் ஈடுபடும் நபர்கள் குறித்து புகார் அளிக்க ஹாட்லைன் ஒன்று உருவாக்கப் பட்டுள்ளதாக சரத்சந்திர கூறினார்.

“யானைகள் நம் நாட்டின் சொத்து. இவை ஒவ்வொரு ஆண்டும் கணிசமான எண்ணிக்கையிலான வெளிநாட்டு சுற்று லாப் பயணிகளை இலங்கைக்கு ஈர்க்கின்றன. அதேபோல், விவசாயிக ளும் முக்கியமான சொத்து. அவர்கள் எங்களுக்கு உணவு கொடுக்கிறார்கள். எனவே, விவசாயி மற்றும் யானை, இரண்டையும் பாதுகாப்பது அவசியம்,” என்றார் அவர்.

காட்டுப்பன்றிகளை தாக்கும் தாடைக்குண்டுகளால் பல யானைகள் கொல்லப்பட்டாலும், தற்போது யானைகளை குறிவைத்து குறிப்பாக விவசாய நிலங்களை சுற்றியுள்ள பகுதிகளில் யானைகளை தாக்கும் சம்பவங்கள் நடப்பதாக கால்நடை மருத்துவர் பினிடியா தெரிவித்தார்.

ஆனால் யானைகள் வேண்டுமென்றே குறிவைக்கப்பட்டாலும் இல்லாவிட்டாலும், இந்த கொடிய சாதனங்களால் ஏற்படும் மரணம் இயற்கை அல்லது மனிதனால் ஏற்படும் பிற மரணங்களை விட மிகவும் வேதனையானது, என்று அவர் கூறினார்.

“நோக்கம் என்னவாக இருந்தாலும், இந்த அவுட்டுக்காயால், யானை பசி, தாகம் மற்றும் தாங்க முடியாத துன்பம் உள்ளிட்ட பெரும் வலியை அனுபவிக்கிறது.” என்றார் அவர். •

